26 MAY 2009

விலை ரூபா 15.00 REGISTERED AS A CATHOLIC WEEKLY (G.P.O.197) FOUNDED 19 FEB 1876
இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN
24-05-2009
மலர்: 133 இதழ்: 09 பக்கங்கள்: 08 St. Joseph's Catholic Press, 360 Main Street, P.O. Box. 2, Jaffna, Sri Lanka. Tel 021-222 2378, Fax 021 2229041, ISSN 1391 - 7633

## நன்று ! நன்று ! நம்பிக்கைக்குரிய நல்ல ஊழியனே!

### கிறிஸ்துவின் குருத்துவத்தில் பங்கெடுத்து சாட்சியாக வாழ்ந்த அருட்தந்தை சரத் ஜீவன் அடிகளார்

**வன்னியில் குருத்துவப் பணி புரிந்து மக்களின் பேரவலங்களில் உட னிருந்து முள்ளிவாய்க்கால்வரை மக்களோடு இடம்பெயர்ந்து சென்று கிறிஸ்துவின் முழுமையான சாட்சியாக வாழ்ந்த அருட்தந்தை மரியாம்பிள்ளை ததேயுஸ் சரத்ஜீவன் அடிகளார் கடந்த 18.05.2009 அன்று முள்ளிவாய்க்காலிலிருந்து மக்கள் வெளியேறிய பின்னர் இறுதியாக வந்து கொண்டிருந்தபோது மரடைப் பினால் இறை பதமடைந்தார்.**

"மக்கள் முழுமையாக வெளியேறிய பின்புதான் நான் வருவேன்." தனது சகோதர குரு நண்பனுக்கு தொலைபேசியில் அடிகளார் சொன்ன இறுதி வார்த்தைகள் இவை. "மிகச்சிறியோராகிய என் சகோதரருக்கு நீங்கள் செய்ததெல்லாம் எனக்கே செய்தீர்கள்." (மத் 25:40) என்ற கிறிஸ்துவின் வார்த்தையினை தனது வாழ்வாக்கியவர் அருட்தந்தை சரத்ஜீவன் அடிகளார்.

பொகவந்தலாவயிலே (Bogawanthalawa) 1968 வைகாசி திங்கள் 13ம் திகதி அடிகளார் பிறந்தார். புனித பத்திரிசியார் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வி முதல் உயர் கல்வி வரை கற்றுத் தேர்ந்தார். பின்பு தொழில்நுட்பக் கல்லூரியில் தன் கல்வியைத் தொடர்ந்த இவர் இறைவனின் அழைப்பை உணர்ந்து அருட்தந்தை அமரர் கில்லறி ஜெபநேசன் அடிகளின் வழிகாட்டலில் 01.03.1993 இல் புனித மடுத்தினார் குருமடத்தில் இணைந்தார். அருட்தந்தை றெஜி இராஜேஸ்வரனின் உருவாக்கலில் 22.8.1994 வரை சிறிய குருமட பயிற்சியை பெற்ற பின் ஆயர் பேரருட்திரு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை அவர்களின் உறுதிப்படுத்தலுடன் 25.9.1994 இல் பெரிய குருமடம் நுழைந்தார்.

தன்னுடைய மெய்யியல் படிப்பை 1997 இல் முடித்துக் கொண்ட இவர் 2002 இல் இறையியல் படிப்பினை முடித்துக் கொண்டு 02.11.2002 திருத்தொண்டராக திருநிலைப் படுத்தப்பட்டு 14.5.2003 இல் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். இவரின் குருத்துவப் பணி வாழ்வு கடினமான பாதைகளாலானது. யாழ் புனித அடைக்கல அன்னை ஆலயத்திலே ஆறு மாதங்கள் உதவிப் பங்குத்தந்தையாக இருந்த இவர் பின்னர் முல்லைத்தீவு புனித பேதுரு ஆலயத்தின் உதவிப் பங்குத்தந்தையாக மாற்றலாகிச் சென்றார். இவ்வேளையிலே ஏற்பட்ட சுனாமிப் பேரனர்த்தம் இவரது பங்கையும் சின்னாபின்னமாக்கியது. பின்னர் உருத்திரபுரம் புனித பத்திமா அன்னை ஆலயத்தின் பங்குத்தந்தையாக அடிகளார் நியமிக்கபபட்டார். அப்போதுதான் போர் தனது கோரத் தாண்டவத்தை வன்னி மண்ணின் மீது ஆரம்பித்தது. பதினெட்டு இடங்களுக்கு மேலாக இடம் பெயர்ந்து அல்லலப்பட்ட வேளையிலும் இறைமக்களின் பணியிலே நல்ல ஆயனாக சளைக்காமல் வலுவிழந்த மக்களுக்கு ஆன்ம உறுதியையும், ஆழமான அன்பினையும் சிறந்த முறையில் அடிகளார் வெளிப்படுத்தினார்.

இயேசு சபை அகதிகள் பணி மையத்தின் (JRS) வனனிமாவட்ட இணைப்பாளராக சாகும் வரை இவர் ஆற்றிய பணிகள் மக்களின் மனங்களிலே நீங்கா நிலை பெற்றுவிட்டன.



இறுதி நாட்களை வலுவற்ற நிலையிலும் பிறரன்புப் பணிகளில் செலவிட்ட இவர் 18.5.2009 அன்று பிற்பகல் 3.00 மணியளவில் மாரடைப்பினால் இறைவனடி சேர்ந்தார். ஆண்டவர் சநநிதியில் என்றும் அமைதியுடன் அடிகளார் இளைப்பாறுவாராக.

## மரியாளின் மாசற்ற இருதயம் வெற்றி கொள்ளும்

### பண்டத்தரிப்பு பற்றிமா அன்னை திருநாளில் யாழ் மறை மாவட்ட ஆயர்



உலக வரலாற்றில் பல்வேறு சந்தர்ப்பங்களில் மரியன்னையின் பிரசன்னம் பல முறைகளில் மக்களுக்கு வெளிப்படுத்தப்பட்டு பல ஆபத்தான சூழ்நிலைகளில் காப்பாற்றப்பட்டமை உலகம் கண்ட உண்மையாகும். இந்தவகையில் முதலாம் உலகப்போர் இடம் பெற்ற காலகட்டத்தில்தான் போர்த்துக்கல் தேசத்தில் புனித மரியன்னை யசிந்தா, லூசியா, பிரான்சிஸ் என்ற மூன்று சிறுவர்களுக்குக் காட்சி கொடுத்து, உலகில் தீயசக்திகளில் இருந்து மக்களைக் காப்பாற்ற, செப, தபம் செய்து செபமாலை செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

அதன் வழியாக போரை முன்னெடுக்க முனைந்த பல உலகத் தலைவர்களின் மனங்களை மாற்ற முறச் செய்து, மக்கள் பாதுகாக்கப்பட்டு அமைதி ஏற்பட ஆழ்ந்த விசுவாசத்துடனும், தப முயற்சியுடனும் செபிக்கும்படி கேட்டுக் கொண்டாள். அதன் ஊடாக காலப் போக்கில் பல அழிவுகளையும், பேராபத்துக்களையும் ஏற்படுத்த முனைந்த போர்ப்பயங்கரங்கள் நீங்கி, மக்கள் அமைதியுடன் வாழ வழிஏற்பட்ட வரலாற்று உண்மைகளை நாம் மறந்துவிட முடியாது.

அவ்வாறே இன்றும் எம் மத்தியில், எம் மக்கள் அனுபவிக்கும் சொல்லமுடியாத துன்பங்களுக்கும் தாங்க முடியாத இழப்புக்களுக்கும் ஆற்றமுடியாத உடல் உளக் காயங்களுக்கும், எண்ண முடியாத உயிராபத்துக்களுக்கும் காரணமாக அமைந்த போரின் உக்கிர நிலைக்குள் சிக்குண்டு வாழும் மக்களுக்கு வலுவின்மையிலும், வலுவான ஆயுதமாக அமைந்தது, மரியன்னை காட்டிய செபமாலைப்பக்தியேயாகும். இதனை போர்ச்சூழல் நின்று மிண்ட மக்களே சாட்சியமாகக் கூறியுள்ளனர்.

எனவே எம்சூழ்நிலையிலும் எமது விசுவாச வாழ்வின் உறுதியும், பாதுகாப்புமாக விளங்கும் செப, தப செபமாலை பக்தியில் நாம் அதிகம் அதிகம் ஈடுபட்டு மரியன்னையின் மாசற்ற இருதயத்தின் புகழை எடுத்துரைத்து எமது மக்களின் துன்பியல் வாழ்விற்கு நீதியுடனான விடுதலையும், அமைதிவாழ்வும் கிடைத்து எமது நாட்டில் நிலையான சமாதானம் ஏற்பட செபிப்போம். அதன் வழியாக 'மரியாளின் மாசற்ற இருதயம் வெற்றி கொள்ளும்' என்னும் உண்மை எமது வாழவில் புது நம்பிக்கையை ஏற்படுத்துவதாக அமையும்.

இவ்வாறு 13.05.2009 அன்று பண்டத்தரிப்பு பற்றிமா [illegible]



தல திருவிழாத் திருப்பலியைத் தலைமைதாங்கி நிறைவேற்றிய யாழ். ஆயர் அதிவந்தனைக்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் தமது மறையுரையில் குறிப்பிட்டார். திருவிழா ஒழுங்கமைப்புக்கள் யாவும் திருத்தல பரிபாலகர். அருட்தந்தை. யேசுரட்ணம் அவர்களின் தலைமையில் இளவாலை மறைக்கோட்டத்தைச் சார்ந்த பங்குகள் இணைந்து சிறப்புற செயற்படுத்தியமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

தகவல்: S.M வுளோறன்ஸ்

## மடு அன்னையிடம் இலங்கையை ஒப்புக்கொடுத்து இலங்கையின் அமைதிக்காக திருத்தந்தை பிரார்த்தனை

கடந்த மே மாதம் 17ம் திகதி வத்திக்கான் சதுக்கத்தில் கூடியிருந்த மக்கள் மத்தியில் உரையாற்றிய திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அடிகள் இலங்கையில் அமைதி திரும்பவும் ஒப்புரவு ஏற்படவும் தாம் பிரார்த்திப்பதாகக் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் அண்மைக் கால யுத்தத்தினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகள், பெண்கள், வயோதிபர்களின் புனர்வாழ்வுக்கு உதவ மனிதாபிமான அமைப்புக்கள் முன்வரவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

மடு அன்னையின் பராமரிப்பில் இலங்கையை ஒப்புவித்த திருத்தந்தை, கன்னி மரியாளின் பரிந்துரையால் ஒப்புரவையும் அமைதியையும் இலங்கைத் தேசத்திற்கு இறைவன் அளிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தார்.

## இடம்பெயர்ந்தோர் முகாம்களில் குணமாக்கல் வழிபாடுகள்

வன்னிப் பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்து யாழ் குடாநாட்டின் பல்வேறு இடங்களிலுள்ள முகாம்களில் உடல் உள நோய்களினால் பாதிக்கப்பட்டு வாழ்ந்து கொண்டிருப்போர் மத்தியில் இறை அருளை, இறை அனுபவத்தை பெற்றுக்கொடுப்பதற்கான இறைதியான குணமாக்கல் வழிபாடுகளை நடாத்துவதற்கான ஒழுங்குளை யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி. யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகள் மேற்கொண்டுள்ளார்.

யாழ் மறைமாவட்ட இறைதியானக் குழுவினரால் நடாத்தப்படும் இவ்வழியாடுகளின் முதலாவது வழியாடு கடந்த 21ம் திகதி வியாழக்கிழமை மிருசுவில் இடம்பெயர்ந்தோர் முகாமில் நடாத்தப்பட்டது. அருட்தந்தையர்கள் லோரன்ஸ், மைக்கல் சவுந்தர நாயகம், எட்வின் அமதி ஆகியோரும், அருட்சகோதரர்களும், அருட்சகோதரிகளும் இவ்வழியாட்டை நடாத்தினார்கள்.

பயங்கரமான போர் மத்தியிலும், மனிதப் பேரவலங்கள் மத்தியிலும், போசாக்கின்மையிலும் வாழ்ந்துவிட்டு வந்திருக்கின்ற இம் மக்களின் உடல், உள தாக்கங்கள் தீர்ந்து அவர்கள் அமைதியுடன் வாழ இறைவல்லமையின் தொடுகையும், ஆசீர்வாதங்களும் இவர்களின் அவசிய தேவையாக இருக்கின்றன.

## கொழும்புத்துறை முதியோர் இல்லத்தில் புனித சூசையப்பர் விழா

தங்கள் பாதுகாவலராகிய புனித சூசையப்பருக்கு நன்றி தெரிவித்து கொழும்புத் துறையில் திருச்சிலுவைக் கன்னியர்களினால் பராமரிக்கப்படும் முதியோர் இல்லத்தில் வாழும் முதியோர் கடந்த 15ம் தேதி ஒரு நிகழ்வை நடாத்தினார்கள். மடத்தின் தலைவி அருட்சகோதரி பெனிற்றா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் கதாநாயகனாக தனது 93வது வயதைப் பூர்த்தி செய்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அந்தோனிப் பிள்ளை செபமாலை அவர்கள் விளங்கினார். அருட்தந்தை பிலிப் அமதி அடிகள் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார்.

பல்வேறு கஷ்டங்கள் நிறைந்த இக்கால கட்டத்திலும் தமக்கு எவ்வித குறையுமின்றி அன்போடும், பாசத்தோடும், நிறைவோடும் தம்மை பாராமரித்துவரும் அருடசகோதரி பெனிற்றா அவர்களுக்கும், ஏனைய அருட்சகோதரிகளுக்கும் அங்கு பணயாற்றும் பிள்ளைகள், ஊழியர்களுக்கும் முதியோர் அனைவரின் சார்பாக பொலிஸ் அப்பா இராசதுரை நன்றி கூறினார்.

தகவல் : திரு. ம. ஞானப்பிரகாசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாவலன் எமது எண்ணம்

ஆண்டவர் நகரைக் காக்காவிட்டால் காவலர்கள் விழித்திருப்பது வீணாகும்

## எது உண்மை?

"அவரே உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார்." என்று கூறி இயேசு வாக்களித்த துணையாளர்தான் இன்று எம் எல்லாருக்கும் தேவையானவராக இருக்கின்றார்.

ஏனென்றால் இன்று உண்மை எது, போலி எது என்று அறியாமல் திணறுகின்ற, யார் உயிருடனிருக்கின்றார்கள், யார் இறந்துவிட்டார்கள் என்று தெளிவாக அறியவிரும்புகின்ற காலத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். இயேசு வாக்களித்த உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியாரைப் பெற்றுக்கொண்டால் எங்களுடைய இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் கிடைத்துவிடும் என்று எண்ணினால் நாம் பரிதாபத்துக்குரியவர்களாவோம்.

ஏனென்றால், இயேசு ஆண்டவர் குறிப்பிடுவது இப்படியான உண்மைகளைப்பற்றி அல்ல. தூய ஆவியாரைப் பெற்றுக்கொள்பவர்கள் எவற்றை அறிந்துகொள்வார்கள் என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

"ஒருவன் உலகம் எல்லாம் தனதாக்கிக்கொண்டாலும் தன் ஆன்மாவை இழந்துவிட்டால் அதனால் வரும் பயன் என்ன?" என்ற உண்மையை, மண்மீது கட்டும் வீடு காற்றினால் மழையினால் அழிக்கப்பட்டுவிடும், ஆகவே, கற்பாறையில் (இறைவார்த்தையில்) அத்திவாரமிடப்படவேண்டும் என்ற உண்மையை, "என்னைப் பிரிந்து உங்களால் எதுவுமே செய்யமுடியாது" என்ற உண்மையை, "பிறர் உங்களுக்கு என்ன செய்யவேண்டுமென்று விரும்புகிறீர்களோ அவற்றையெல்லாம் நீங்கள் அவர்களுக்குச் செய்யவேண்டும்" என்ற உண்மையை, "என்னைப் பின் செல்ல விரும்புகிறவன் தன் சிலுவையைச் சுமந்து கொண்டு என்னைப் பின் செல்லட்டும்" என்ற உண்மையை மற்றும் "தன் நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதைவிட மேலான அன்பு எதுவுமில்லை" என்ற உண்மையை நாம் தெளிவாக எம் வாழ்வில் உள்வாங்கிக்கொள்ளத்தான் அந்த உண்மையின் ஆவியானவர் எமக்குத் தேவை. இந்த உண்மைகளைத்தான் அவர் எமக்கு வெளிப்படுத்துவார்.

தூய ஆவியாரின் துணையோடு நாம் இவ்வுண்மைகளை எம் வாழ்வில் கண்டு கொண்டோமென்றால், நாம் இன்று விடைதேடி அலைகின்ற கேள்விகள் சின்னஞ்சிறு கேள்விகளாக மாறிவிடும்: அதாவது அவற்றுக்குரிய விடை தெரிந்தாலென்ன, தெரியாவிட்டால் என்ன என்ற மனநிலை எமக்குள் ஏற்பட்டுவிடும்: அவைபற்றிய உண்மைகள் எம் வாழ்வில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது.

– அப்போதான் உண்மையான அமைதி பிறக்கும் என்பதைத் தூய ஆவியாரை விட்டுச் செல்வதாக வாக்களித்த ஆண்டவர் இயேசு "அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன்" என்று கூறியிருக்கின்றார்.

எனவே, தூய ஆவியாரை அறிந்து கொள்ளாத உலகத்துக்குள் நாமும் அகப்பட்டு அவசியமற்ற கேள்விகளுக்கு விடைதேடி அலைந்து எம் ஆன்மாவைக் கெடுத்து விடாமல், அவர் வெளிப்படுத்துகின்ற உண்மைகளைத் தெளிவாகக் காண்போம். எம்மையும், அயலவர்களையும், எம் மக்களையும் சரியான, தெளிவான பாதைகளில் வழிநடாத்துவோம்.

கடந்து வந்த பாதைதான் உண்மை, தொடர்ந்தும் அதே பாதையில்தான் செல்வோம், மாறவே மாட்டோம் என்று அடம்பிடிக்காமல் தூய ஆவியார் வெளிப்படுத்தும் உண்மைகளுக்கு எம்மை விட்டுக்கொடுத்து, அவை எம் வாழ்வில் ஏற்படுத்த விரும்புகின்ற மாற்றங்களுக்கு இடங்கொடுக்க சிறிதாவது எம்மைத் தாழ்த்துவோமா? எமது சிந்தனைகளில் மாற்றங்களைக் கொண்டுவர முற்படுவோமா?

"உலகம் அவரை ஏற்றுக்கொள்ள இயலாது.
ஏனெனில் அது அவரைக் காண்பதுமில்லை, அறிவதுமில்லை.
நீங்கள் அவரை அறிந்திருக்கிறீர்கள். ஏனெனில் அவர் உங்களோடு தங்கியிருக்கிறார்: உங்களுக்குள்ளும் இருக்கிறார்." [யோவான் 14:17]

அருட்பணி. ப.யோ. ஜெபரட்ணம்

# துன்பத்தை தாங்க இதோ உங்களுக்கு ஒரு வலிமை

சென்ற வாரத் தொடர்ச்சி...

அருட்பணி. மா. ஜெறில் இராசநாயகம்

"என் அருள் உனக்கு போதும்" (2 கொரி. 12:9)

தூய பவுல் தனது உடலை வருத்திக் கொண்டேயிருந்த முள்ளை எடுத்துவிடும்படி மூன்று முறை மன்றாடியபோது, ஆண்டவர் "என் அருள் உனக்கு போதும்" என்று கூறினார். இறைவன் எமக்கொரு துன்பத்தை அனுமதிக்கும்போது அத்துன்பத்தைத் தாங்க தேவையான சக்தியையும் மனத்திடத்தையும் சேர்த்தே தருகிறார். பலர் இறைவனுடைய பதிலை மன்றாடிக் கேட்பதற்குப் பதிலாக, அங்கலாய்த்து, இறைவனுக்கு எதிராக முணுமுணுப்பதுண்டு. உமது வாழ்விலே நீர் இதுவரை பெற்றிராத ஒன்றை பெறுவதற்கு, நீர் இதுவரை நம்பாத ஒன்றை இறைவல்லமையை நம்பவேண்டும். இறைவன் உமது கரத்தில் இருந்து ஒன்றை எடுக்கும்பொழுது அவர் உம்மை தண்டிப்பதில்லை. மாறாக, இன்னும் மேலான ஒன்றைப் பெறுவதற்காக உமது கரங்களை திறந்து விடுகின்றார். இறைவனுடைய அருள் உம்மை பாதுகாக்காத இடத்துக்கு நடத்திச் செல்வதில்லை.

**துன்பம் எப்போது சுமையாகிறது?**

எமது விருப்பமின்றி எமக்குவரும் துன்பம் உண்டு. உதாரணமாக, விபத்திலே நான் எனது காலை இழப்பது. இன்னொன்று என்னுடைய தவறால் எனக்கு ஏற்படும் துன்பம். உதாரணமாக கணவனின் சோம்பலினால் அல்லது பொறுப்பற்ற தன்மையினால் குடும்பத்தில் வறுமை பெருகுதல். நாம் இங்கு பார்க்கப் போவது எமது விருப்பமின்றி எமக்கு வந்து சேரும் துன்பங்கள் பற்றியே.

துன்பம் கொடூரமாக தோன்றுவதற்குக் காரணம், முதலாவது துன்பம் என்றால் என்ன என்பதை நாம் உணராமல் இருக்கலாம். இரண்டாவது, துன்பத்தை எவ்வாறு தாங்குவது என்று எமக்கு தெரியாமல் இருக்கலாம். மூன்றாவது, துன்பத்தை ஏற்பதால் நமக்கு உண்டாகும் அரும்பெரிய நன்மைகளை நாம் அறிந்து கொள்ளாமல் இருக்கலாம். ஒரு பக்கத்தில், சிலர் பாரிய துன்பங்களையும் எளிதாக ஏற்கும் போது, மறு பக்கத்தில், வேறுசிலர் மிகச்சிறிய துன்பங்களுக்கே பெரிதும் அங்கலாய்க்கின்றனர்.

துன்பத்தை மனக்கிலேசம் இன்றி பொறுமையோடு ஏற்றுக்கொள்ளும்போது, அத்துன்பம் நமக்கு பெரிதாகத் தெரிவதில்லை. துன்பவேளையில் எமது பொறுமையீனம், துன்பத்தை எதிர்த்துப் போராட்டம், முணுமுணுப்பு, துன்பத்தை ஏற்க மறுப்பது போன்ற இவைகள் தான் துன்பத்தை பன்மடங்காக்கி, கொடூரமாக்கி, நாம் அனுபவிக்க வேண்டிய மீட்பின் பலன்களையும் நமக்கு இல்லாமல் செய்கின்றன. சிலர் தமது வாழ்விலே பெரும் பெரும் துன்பங்கள் ஊடாகச் செல்லும் போதும், மிகப் புயலினூடாகச் செல்லும் போதும், எவ்வாறோ உள்ளத்து அமைதியோடும், பொறுமையோடும் செல்கின்றனர். இவைதான் அனுபவம் கற்றுக் கொடுக்கும் பாடம். இவை நமக்கு பெரும் எடுத்துக்காட்டாக அமையவேண்டும்.

**எத்துன்பத்தை தவிர்க்க முடியாதோ அத்துன்பத்தை ஏற்றுவாழப் பழகவேண்டும்.**

துன்பம் என்னும் மறைபொருள் மனிதனால் என்றுமே விளங்கிக் கொள்ள முடியாதது ஒன்று. துன்பம் ஏன் என்ற கேள்விக்கு முழுமையான பதிலைக் கொடுக்கமுடியாது. துன்ப நேரத்தில் இறைவனிடம் சரணடைந்து துன்பத்தை மனமார ஏற்று வாழ்வதுதான் மீட்பு பெறுவதற்கான ஒரேவழி. "தாற்றுக் கோலை எதிர்த்து உதைப்பது உனக்கு கடினமாம்" (தி. ப. 26:14) என்று இயேசு பவுலுக்குக் கூறினார். இறை சித்தத்திற்கு எதிராக நாம் எதிர்நீச்சல் போட்டு மன நிறைவை, நிம்மதியைப் பெற முடியாது. இறைவனின் திருவுளத்திற்கு நாம் சரணடையும் போதுதான் எமது உள்ளத்தின் ஆழத்தில் இறைவனுடைய குரலை கேட்கின்றோம்.

**குற்றமற்றவர்களின் துன்பம் – யோபு ஓர் உதாரணம்.**

யோபு ஆகமத்தின் கருப்பொருள் "ஏன் துன்பம்" என்பதல்ல. மாறாக, துன்பநேரத்தில் குற்றமில்லாதவர்கள் எவ்வாறு இறைவனோடு உரையாடுவது என்பது. தன்னுடைய குற்றமற்ற நிலைபற்றி ஆரம்பத்தில் ஆண்டவரோடு வாதாடிய யோபு, பின்னர் ஆண்டவரிடத்தில் முழுமையாக சரணடைகின்றார். தனது உரையாடலின் முதற்பகுதியில் தன்னையே மையப்படுத்திப் பேசிய யோபு, தனது உரையாடலின் இரண்டாம் பகுதியில், இறைவனிடம் சரணடைந்து, இறைவனையே மையப்படுத்திப் பேசுகிறார். இறைவனின் திட்டம் இறைவனின் வார்த்தைகள், இறைவனின் பிரசன்னம் என்கிற இவையே முதன்மை பெறுகின்றன. யோபு 42:1-6 வசனங்கள் இறைவனிடம் முழுமையாக சரணடைந்த ஒருவருடைய தெளிவான நிலையைப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

**யோபு 42:1-6 வசனங்களில் கூறிய பதிலில் மூன்று அம்சங்களை நாம் அவதானிக்கலாம்.**

1. இறைவன் நம் ஒவ்வொருவருக்குமென திட்டங்களை வைத்திருக்கிறார். அத்திட்டங்களை நிறைவேற்றுகிறார் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

2. இறைவனோடு நாம் வாதாடும்போது அந்த நிகழ்வின் முழு உண்மையும் நமக்குத் தெரிவதில்லை.

3. இறைவனிடம் சரணடைந்தபின் இறைவன் தரும் அருளோடு அவரது கண்ணோட்டத்தில் அந்நிகழ்வைப் பார்க்கும்போது நமது உரையாடல் எவ்வளவு மகிழ்ச்சியானதாக அமைகின்றது.

**முடிவாக,**

இதுவரை நாம் சிந்தித்தவை எமது விருப்பமின்றி எமக்கு வந்துசேரும் துன்பங்கள் பற்றியே. இன்றைய இத்தகைய சவாலான துன்பங்களின் மத்தியில் பலர் இறைவனைப்பற்றி பலவிதமான கேள்விகளை எழுப்பிக்கொண்டே இருக்கின்றனர். பலர் இத்துன்பங்களை விட்டு ஓட, மறக்க எத்தனையோ முயற்சிகளை எடுக்கின்றனர். துன்பம் என்பது மனிதரால் விளங்கிக்கொள்ள முடியாத மறைபொருள்; பதில், இறைவன் தரும் அருள் துணையோடு துன்பத்தை ஏற்று வாழ்வதே ஒரே வழி; மீட்புக்கான வழி.

# 150 ஆண்டுகள் கண்டு மகிழும் திருக்குடும்ப தியான யோக சபையினர்

## திருக்குடும்ப சபையில் நன்றிருவிலும் புனித நாள்



திருக்குடும்ப தியான யோக சபையின் வாழ்விலே, வரலாற்றிலே, பொன்னான புனித நாள் 01.06.2009. திருக்குடும்ப சபைக்கு, உயிர்நாடியாக, சபையின் ஸ்தாபகர் வண. பீற்றர் பியர்பொனு அடிகளாரால் அமைக்கப்பட்டது திருக்குடும்ப தியான யோக சபை. இன்று தனது வயதில் எல்லை 150ஐ எட்டியுள்ளது. கடந்து வந்த ஆண்டுகளில், ஆண்டவரின் அருட்செயல்களை நினைத்து நன்றிப்புகழ் பாடவும், காலத்தின் குறிகளுக்கேற்ப, தம் தியான யோக சபையை வளமாக்கி மலர்விக்கவும், அருட்கடலாம் ஆண்டவர் தந்தருளிய நல்ல தோர் சந்தர்ப்பம் இது.

தந்தையாம் இறைவன், இறை குடும்ப மாகத் தம் மக்களை இணைக்க, தம் திருமகன் யேசுவை உலகிற்கு அனுப்பினார். இதுவே பரம தந்தையின் ஆவல். 19ம் நூற்றாண்டில் பிரான்ஸ் நாடு பல்வேறு குழப்பங்களுக்கும் மாற்றங்களுக்கும் உட்பட்டிருந்த கால கட்டத்தில், இறைவனின் தனி அழைப்பைப் பெற்ற பீற்றர் பியர்பொனு அடிகளார் இறைவனின் திட்டத்தை செயற்படுத்தும் ஆயுதமாக உந்தப்பட்டார். ஸ்லார் குழுக்களிலும், விசுவாசத்தில் [illegible] ஒரே உள்ளமும், ஒரே ஆன்மாவும் கொண்டு விளங்கிய ஆதிக் கிறிஸ்தவர்களின் சாட்சியத்தை வாழ்வதுமே, சபையின் நோக்கமாகக் கொண்டார். நசரேத்தில் யேசு, மரி, சூசை வாழ்ந்த வாழ்வை வாழ்வதே சபைச் சகோதரிகளின் எடுத்துக்காட்டான வாழ்வதும். சபை அங்கத்தினரை உந்தித் தள்ளும் சக்தியாக, வற்றாத அமைந்தது. "தேவன் மாத்திரமே" என்னும் மனப் போக்காதும் திருக்குடும்ப சபை பல்வேறு நிலையிலிருந்தும், தன்னகத்தே தழுவிய ஒரு பரந்த விருட்சமாக இன்று பணி புரிகின்றது.

- அப்போஸ்தலிக்க சகோதரிகள்
- தியான யோக சகோதரிகள்
- திருமடச் சார்பற்ற சகோதரிகள்
- பொது நிலையினர் – இளைஞர், யுவதிகள், பிள்ளைகள் அடங்கலாக.
- குருக்களை துணை அங்கத்தினர்

[illegible] பிரசன்னமான வாழ்வு வாழ்ந்து

**01.06.2009**

அருட்சகோதரி. ஜெறால்ஸ்ன்,
திருக்குடும்ப தியானயோக கிளை

குருக்குடும்பத்தின் மகப்பண்பையும், நோக்கத்தையும் கொண்டு ஒரே அர்ப்பணத்தில் ஐக்கியமாக இறைபணியைப் புரிகின்றனர்.

காலங்களினூடாகச் செயற்படும் தந்தையாகிய இறைவன் 19ம் நூற்றாண்டில், கலக்கம் நிறைந்த சூழ்நிலையில் தம் மக்களை தேடி வந்தார். பிரான்ஸ் நாடு, அரசியல் பொருளாதாரம் போன்ற பல்வேறு நிலைகளில் குழப்பமடைந்து திருவைக் கட்டிக்களினூடாகச் சென்று கொண்டிருந்த நிலையில், போர்டோவிலிருந்த குருவான பீற்றர் பியர்பொனு இதயத்தை இறைவன் தனதாக்கிக் கொண்டார். ஆன்மீக வாழ்வைச் சிறப்பிக்க இவர் அக்கால கட்டத்தில் எல்லா மக்களிடையேயும், நற்செய்தியைப் பரப்பி,

(7 ம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பாரவோன் அரசு' இன்று அடிமைப்படுத்தும் — வன்னி மக்களின் அவல நிலை —

ஒடுக்கப்பட்ட இஸ்ரயேல் மக்கள் எகிப்து நாட்டிலிருந்து விடுதலை பெற்றது மீட்பு வரலாற்றில் ஒரு முக்கிய கட்டமாகும். இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த மக்களை அடிமை வேலைவாங்கியும், இன ரீதியாகவும், மதரீதியாகவும் அடிமைகளாக்கி, கடவுளைக் கூட ஒரு பொருட்டாக கருதாமல், யாருடைய பேச்சுக்கும் செவிசாய்க்கக் கூட மனமில்லாமல் கொடுங்கோலாட்சி நடத்திய பாரவோன் மன்னனின் வரலாறு எம் யாவருக்கும் தெரிந்ததே. அதே போன்று ஒரு கொடுங்கோல் ஆட்சிக்குள், ஏன் அதற்கு அப்பால் இன்று தமிழ் இனம் குறிப்பாக வன்னிவாழ் இஸ்ரயேலர்கள் தத்தளித்துக் கொண்டு இருக்கின்றார்கள். கி.மு 1900 ஆண்டுகளுக்கு முன் ஆண்டவராகிய கடவுள் தந்தை ஆபிரகாமை அழைத்த வேளை, தமிழ் இனம் ஒரு தனித்துவமான இனமாக சிந்துவெளி நாகரீகத்தில் தோன்றி தென் பாரதத்தில் வாழத் தொடங்கிவிட்டது. இன்று

செல்மழைகளுக்குள்ளும், விமானம், பீரங்கித் தாக்குதல்களுக்கு மத்தியிலும், இன்னும் மேலாக பொருளாதார பற்றாக்குறையால் நீரின்றி, உணவின்றி, மருந்தின்றி, இல்லிடங்களின்றி அகதிகளாக அடிமைப்படுத்தப்பட்டு எழுமுடியாமல் உயிருக்காகவும், விடுதலை வாழ்வுக்காகவும் போராடிக்கொண்டிருக்கின்றார்கள்.

''இம்மக்கள் மேல் இரக்கம் காட்டுங்கள். இவர்களை ஒன்றும் செய்ய வேண்டாம். அவர்களை அவர்கள் இடங்களில் நிம்மதியாக வாழ விடுங்கள்" என்ற இறையடியார்களின் கெஞ்சும் குரல்களும், சர்வதேச அழுத்தங்களும், தீக்குளிப்புக்களும், உண்ணாவிரதங்களும், இன்னும் போராட்டங்களாகிய எங்களது பக்தி முயற்சிகளும் தற்போதைய பாரவோன் அரசுகளை அசைக்க கூட முடியவில்லை. '' யார் அந்த ஆண்டவர்? அவரது பேச்சைக் கேட்டு இஸ்ரயேலை நான் ஏன் அனுப்ப வேண்டும்? அந்த ஆண்டவரை நான் அறியேன்; இஸ்ரயேலை நான் போக விடமாட்டேன்" (விப.5:2) என்பதைப்போல ''எமக்கு கட்டளையிடுபவர் யார்? எம் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுபவர் யார்? இந்த இறைமையுள்ள ஒரு நாடு. இவர்களுடைய பேச்சைக் நாம் கேட்க மாட்டோம். "என முழக்கமிடும் இன்றைய பாரவோன் அரசு தமிழர்களாகிய எமக்கு ஒரு போதும் இரக்கம் காட்டி விடுதலை தரும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. இறைவன் பாரவோனுடைய மனத்தை கடினப்படுத்தி, மோயீசன் வழியாக தன்னுடைய வல்லமையை வெளிப்படுத்தி இஸ்ரயேலர்களை மீட்டு வந்தது போல, வன்னி இஸ்ரயேல் உறவுகளை மீட்க விரைவில் ஒரு மோயீசனை அனுப்பி தனது வல்லமையை வெளிப்படுத்துவார். என்பதே எமது விசுவாசமும், எதிர்பார்ப்புமாகும்.

தற்போதைய பாரவோன் அரசுகளுக்கு இறைவனால் கொடுக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் ஏராளம். ஆனால் இறைவனுடைய திட்டம் அப்பாரவோனுடைய மனத்தை இறுகச் செய்து தன்னுடைய வல்லமையை குறிப்பாக இச்செயலுக்கு ஊக்கம் கொடுத்து உதவி செய்கிற வல்லரசுகளுக்கு ஊடாகவும், நீதியைக் கடைக்காமல அநீதிக்கு துணை போகின்ற சில தீய சக்திகளுக்கூடாகவும் வெளிப்படுத்தப் போகின்றார். எனவே நம்பவேண்டியுள்ளது. அன்று மோயீசன் பாரவோனைப் பார்த்து, ''பாலை நிலத்திலே எனக்கொரு விழா எடுக்குமாறு என் மக்களை போகவிடு என இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவர் உரைத்துள்ளார்" (விப.5:1) என்று அறிவித்தார். கிறிஸ்தவர்களுக்கே முக்கியமான காலமாகிய இக்காலத்தில் தங்கள் செபு, தப முயற்சிகள் அனைத்தும் இழந்தவர்களாய் இறையில்லம் தேடி அலைபவர்களாய் குருக்களிடத்தில் தங்கள் கைகளை உயர்த்தியவர்களாக உதவி வேண்டி நிற்கிறார்கள். உண்மையான இறைவாழியர்களாக மக்களோடு சேர்ந்து கஸ்ரப்படுகின்ற இவர்களுடைய அர்ப்பணவாழ்வும், நீதியான குரல்களும் தற்போதைய அரசுக்கு ''செவிடன் காதில் ஊதிய சங்காக" அலட்சியப்படுத்தப்படுவது மட்டுமல்ல, அவர்களுக்கு எதிராக பொய்க் குற்றச் சாட்டுக்களும் முன்வைக்கப்படுவது வேதனைதரும் விடயமாகும். இதனை இறைவாக்கினர் எரேமியாவினுடைய வாழ்விலும் நாம் காண்கின்றோம் '' வாருங்கள் எரேமியாவுக்கு எதிராக சூழ்ச்சி செய்வோம். குருக்களிடமிருந்து சட்டமும், ஞானிகளிடமிருந்து அறிவுரையும், இறைவாக்கினரிடமிருந்து இறைவாக்கும் எடுபடாது. எனவே அவர் மீது பொய்க் குற்றம் சாட்டுவோம். அவர் சொல்வதைக் கேட்க வேண்டாம்" (எரே 18:18). என அவருடைய எதிரிகள் சூழ்ச்சி செய்கிறார்கள். இதையொத்த ஒரு மாஜைக்குள்

(6ம் பக்கம் பார்க்க)

# "வல்லமையின் ஆவியை பெற்றுக் கொள்வோம்"

கத்தோலிக்க திருச்சபையானது பாஸ்கா விழாவிற்கு பின் இறைமகன் இயேசுவின் விண்ணேற்பு பெருவிழாவை பெருமகிழ்வோடு கொண்டாடுகின்றது. தொடர்ந்து தூய ஆவியின் விழாவை (பெந்தக் கோஸ்து விழா) திருச்சபை முன்னெடுக்கிறது.

திருத்துவத்தின் மூன்றாம் ஆளாகிய தூய ஆவி படைப்பின் தொடக்கத்தில் இருந்தே அற்புதமாக செயலாற்றி வருவதை நாம் காணுகின்றோம். பிதாவும் சுதனும் பரிசுத்த ஆவியும் ஒன்றாக உள்ளார்கள். வெறுமையில் இருந்த இறைவன் அன்று உலகைப்படைத்த பொழுது நீர்த்திரளின் மேல் கடவுளின் ஆவி அசைந்தாடிக் கொண்டிருந்தார் (தொடநூ 1:2) படைப்பின் ஒவ்வொரு கட்டத்திலும் வல்லமை உள்ள ஆவியாரின் செயற்பாடுகள் அபரிமிதமாக இருந்ததை பார்க்க முடியும். படைப்பின் முதல் ஐந்து நாட்களும் இறைவன் உலகை படிப்படியாக படைக்கும் போதும் உலகை சார்ந்த அனைத்தையும் சிருஸ்டிக்கும் போதும் இறைவன் தனது சாயலாக மனிதனை படைக்கும் போதும் தூய ஆவி உயிர் மூச்சாக இருந்தார்.

பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியின் அருள் பல இடங்களில் உன்னதமாக செயற்படுவதை நாம் காணுகின்றோம். ஆபிரகாம் தொடங்கி பழைய ஏற்பாட்டுக்கும் புதிய ஏற்பாட்டுக்குமான இறைவாக்கினர் திருமுழுக்கு யோவான் வரை பரிசுத்த ஆவியின் அற்புத வழிநடத்தல் கூடவே இருப்பதை நாம் காணுகின்றோம்.

மானிடா இந்த எலும்புகள் உயிர் பெறமுடியுமா? (எசே. 37:3) என்ற கேள்விக்கு ஆவியின் வல்லமையால் முடியும் என்று நாம் காண்கின்றோம். தரையில் கிடந்த உலர்ந்த எலும்புகள் மீது வல்லமை உள்ள ஆவியின் உயிர் மூச்சு ஊதப்படும் போது எலும்புகள் எல்லாம் ஒன்று சேர்ந்து சதையும் இரத்த நாளங்களும் உருவாக உயிர் பெற்று எழுவதை நாம் காண்கின்றோம்.

இறைமகன் இயேசு இந்த உலகிற்கு வந்தது எவ்வளவு உண்மையோ அந்த அளவுக்கு பரிசுத்த ஆவி வந்ததும் உண்மையே. இறைமகன் இயேசுவின் பிறப்பிற்கு முன்பே இறைவாக்கினர்கள் பரிசுத்த ஆவியை முன்னறிவித்தார்கள்

''நான் மாந்தர் அனைவர் மேலும் என் ஆவியை பொழிந்தருள்வேன். உங்கள் புதல்வரும், புதல்வியரும் இறைவாக்குரைப்பர். உங்கள் முதியோர் கனவுகளையும் காட்சிகளையும் காண்பர். அந் நாட்களில் உங்கள் பணியாளர் பணிப்பெண்கள் மீதும் என் ஆவியை பொழிந்தருள்வேன்" என்று முன்னறிவிக்கப்படுகிறது. (யோவே 2: 28-29)

இவ்வாறு இறைவாக்கினர்கள் அரசர்கள், நீதித்தலைவர்கள் எல்லோரையும் வல்லமையோடு இறைவாக்குரைக்க வழிநடத்திய ஆவி இன்றும் எம்மீது பொழியப்படுகின்றார்.

இறைமகன் இயேசுவின் மனித அவதாரம் ஆவியின் வல்லமை உள்ள அருட்பொழிவோடு நிறை வேறுவதை நாம் காண்கின்றோம். '' தூய ஆவி உம் மீது வரும் உன்னத கடவுளின் வல்லமை உன்மேல் நிழலிடும்" (லூக். 1: 35) புனித மரியாளின் உதிரத்திலே மனுவுருவாக ஆவியின் அற்புதமான அருட்பொழிவே காரணமாகின்றது.

இறைமகன் இயேசு பகிரங்க பணிவாழ்வைத் தொடங்கும் முன் திருமுழுக்குப் பெறும் போது தூய ஆவி புறா வடிவத்தில் அவர் மீது இறங்கியதைக் காண்கின்றோம். (லூக் 3:21 - 22). திருமுழுக்கு பெற்ற பின் தூய ஆவியால் ஆட் கொள்ளப்பட்டு பாலைநிலத்திற்கு வழி நடத்தப்பட்டார். அங்கு அவர் சாத்தானால் சோதிக்கப்பட்ட போது ஆவியின் வல்லமையால் எல்லா சோதனைகளிலும் வெற்றி கொள்கின்றார். (லூக் 4:1-13)

இயேசு விண்ணகம் சென்றபோது ஒரு துணையாளரை தருவதாக வாக்கு பண்ணுகின்றார். (யோவான் 15: 26-27). உண்மையை உணர்த்தும் தூய ஆவியை அனுப்புவேன் என்று உறுதி கூறுகின்றார். (யோவான் 16.13). அவர் முழு உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார்) என்று வாக்கு பண்ணுகிறார்.

கிறிஸ்து விண்ணகம் செல்ல முன் உன்னதத்தில் இருந்து வரும் வல்லமையால் ஆட்கொள்ளப்படும் வரை காத்திருக்க சீடர்களுக்கு பணிக்கின்றார் (லூக். 24:49).

இறைமகன் இயேசு தன் உத்தானத்தின் பின் நாற்பது நாட்கள் அவ்வாறு சீடர்களோடு தங்கி இருந்து அவர்கள் கண்முன்னாலேயே விண்ணகம் எடுத்துக் கொள்ளப்பட்டார். உறுதி கூறிய படியே பத்தாம் நாள் துணையாளரை அனுப்புகின்றார்.

யூதர்களுக்கு அஞ்சி பூட்டிய அறைக்குள் சீடர்கள் மரியாளோடு செபித்துக் கொண்டிருக்கும் போது தூய ஆவியார் அக்கினி நாக்கு உருவமாக அவர்கள் மேல் இறங்கி




அவர்களை ஆட்கொண்டு அருளைப் பொழிந்து கொடைகளாலும், கனிகளாலும் நிரப்புகின்றார். தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட சீடர் வீறு கொண்டெழுந்து இறைவாக்குரைக்கின்றார் (தி.தூ2:1 -13).

நாமும் திருமுழுக்கில் முதல் முறையாக தூய ஆவியை பெறுகின்றோம். தொடர்ந்து பெறும் ஒவ்வொரு அருட்சாதனத்திலும் அவருடைய கொடைகளையும், கனிகளையும் தந்து கொண்டிருக்கிறார். எனவே நாமும் தூய ஆவியை ஆட்கொள்ள எம்மை விட்டுக் கொடுப்போம். அவருடைய கொடைகளையும் கனிகளையும் எம்மில் செயலாற்ற இடம் கொடுப்போம்.

''தூய ஆவியை பழிப்பவர் மன்னிப்பு பெறமாட்டார்" (லூக். 12:10) என்ற இறைவார்த்தையை மனதில் கொண்டு சாட்சிய பகர்ந்து வாழ்வதோடு மட்டும் நின்று விடாமல் ''நீங்கள் கடவுளுடைய கோவிலென்றும், கடவுளின் ஆவியார் உங்களில் குடியிருக்கிறார் என்றும் உங்களுக்குத் தெரியாதா ஒருவர் கடவுளின் கோவிலை அழித்தால் கடவுள் அவரை அழித்து விடுவார் ஏனெனில் கடவுளின் கோயில் தூயது நீங்களே அக்கோயில் (கொரி 3: 16-17) என்ற இறை வார்த்தைக்கு அர்த்தம் கொடுத்து எமது ஆன்மிக வாழ்வில் புனிதம் காத்து ஆவியாளருக்கு எம்மை அர்ப்பணம் செய்வோம் நாம் ஒவ்வொருவரும் வாழ்வாலும் வார்த்தையாலும் இறைவாக்கு உரைக்கவும் இறைமகன் இயேசுவை ஏற்றுக் கொண்டோம் என்பதற்கேற்ப அவரது பண்புகளை எமது வாழ்வில் கொண்டு வாழ்ந்து ஆவிக்குரிய வாழ்வுக்கு அர்த்தம் கொடுப்போம். மற்றவர்களையும் ஆவிக்குள் வாழ தூண்டுவோம்.

**இ.அ.அமலரூபன்**
**வேலணை.**

# நம்மைப் பற்றிச் சில...

நிம்மதியைத் தேடி அங்கும் இங்கும் அலைபட்டுத் திரியும் எங்களுக்கு எம் உள்ளத்திலேயே அந்த நிம்மதி இருக்கின்றதென்பதை நாம் பல தடவைகள் மறந்தே வாழ்கின்றோம். நாம் நமது பலவீனங்கள், தவறுகள் மற்றும் எம்மைக் கூடாத செய்கையில் ஈடுபடுத்தும் குணங்கள் யாவற்றையும் நீக்கி வாழப்பழகிக் கொண்டால் நாம் எங்கோ தேடும் நிம்மதியும் எங்கள் உள்ளத்திலேயே கிடைக்கும். அத்தோடு எமது வாழ்விற்கும் நற்சிந்தனைக்கும், வாழ்வின் வெற்றிக்கும் மெருகூட்டும்.

சோகங்களும், இழப்புக்களும் இன்று நேற்று உருவாகியதல்ல, நாம் இவற்றையெல்லாம் பொருட்படுத்தாது வாழப் பழகிக் கொள்ள வேண்டும். ஏனெனில் கவலையை நினைத்து வாழும் போது சோகத்தினால் அவனின் குணம் மாறுகின்றது. சக்தி குறைகின்றது. மூளை பாதிக்கப்படுகின்றது. அத்தோடு உடல், உள வியாதியும் தேடி வருகின்றது. மனித நலனுக்கு ஊறு செய்யும் சோகத்தை வெறுக்க வேண்டும். சதா சிந்தனை செய்வதும் மனக்கோட்டை கட்டுவதும் புத்தியை பேதலிக்கச் செய்து விடும். சஞ்சலப்படுவதாலும் கவலைப்படுவதாலும் சரீரம் தான் மெலிகின்றது. மனிதர்களின் கவலைகள் அதிகரிக்கும் போது சத்துருக்கள் சந்தோஷமடைகின்றன. மனிதனின் வாழ்விற்கு எமனாக விளங்கும் கவலையை விட்டு விட்டு வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

உலக அரங்கில் நீண்ட காலம் வாழவும், நடிக்கவும் விரும்பும் இனம் என்றால் அது மனித இனமே. ஏனெனில், அவனுக்கே ஆசை அதிகம், மனிதன் பிறப்பதற்கு முண்டியடிக்கின்றான். இறப்பை வெற்றி கொள்வதற்கும் தன்னிடம் உள்ள திறமைகளையும் மற்றவர்களிடம் இருந்து பெறும் உதவிகளையும் பயன்படுத்தி இறப்பை வெல்ல ஆசைப்படுகின்றான். மனிதன் காமம், பொருள் பேராசை என்பவற்றை அடைவதற்கு படாத பாடுபடுகின்றான். ஆனால் அவன் அன்றே தன்னை அழிவிற்கு தயார்படுத்திக் கொள்கின்றான் என்பதை மறந்தே வாழ்கின்றான். மனிதனுக்கு ஆறறிவு என்பது உண்மை. ஆனால் அதன்படி வாழ்கின்றானா என்பதே கேள்வி.

இந்த உலகில் ஆன்மாவை அழிப்பதற்கோ அல்லது அதைப் பற்றி விமர்சனம் செய்வதற்கோ யாருக்கும் அதிகாரம் இல்லை. இன்னும் சொல்லப்போனால் ஆன்மாவானது பிறப்பதுமில்லை, இறப்பதுமில்லை அது அறியப்படுவதுமில்லை. அழிக்கப்படுவதுமில்லை. ஆன்மாவானது பழுதுபட்ட உள்ளத்தை உதறித்தள்ளிவிட்டு ஒரு புதிய உடலில் புகுந்து விடும். பலர் ஆன்மாவைக்கண்டு கொண்டவர்கள் போலும், அதை புரிந்து கொண்டவர்கள் போலவும் தாண்டவமாடுவார்கள். உண்மையில் ஆன்மாவானது உறக்கம், கனவு, விழிப்பு, உலக சக்தி இவை அனைத்திற்கும் அப்பாற்பட்டது.

எமக்கு யாரும் தீங்கு செய்தவுடனேயே அவர்களுக்கு உடனே பகைமைக்குப் பகைகளையும் தீமைக்குத் தீமையும் கொடுக்க முயற்சி செய்கின்றோம். இந்தச் செயல்கள் ஏற்படுவதற்கு காரணம் எல்லாவற்றிலும் அளவுக்கு மிஞ்சி பற்றுக் கொள்வதுவே. துன்பங்களையும், இன்பங்களையும் ஒரு மனிதன் காலம் கடந்த நிலையிலேயே அதன் நன்மை தீமைகளை அறிவான். மனிதன் இதிலிருந்து விடுபடவேண்டுமாயின உடல் பொருள், பேராசை மீது பற்றின்றி ஆன்மாவை உணர்ந்து நல்லொழுக்கங்களை கடைப்பிடித்து வாழ்வையே நாங்கள் சிந்தித்தால் எங்களை நாங்கள் அடைய முடியும். மனிதஅழிவிற்கும், துன்பத்திற்கும் முற்றுப்புள்ளி இடப்படும். தேனீ பல பூக்களில் இருந்து தேன் சேகரிப்பது போல நாமும் பலவழிகளில் இருந்து நல்லவைகளைக் கானி நாமும் மற்றவனும் வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

இவ்வுலகில் மனிதர்களாகப் பிறந்த நாங்கள் அனைவரும் எமது மரணத்தை வரைக்கும் அறிந்து வாழக்கூடிய நிலைகள் மூன்று. ஒன்று நம்மை நாங்கள் அறிதல். இரண்டாவது நம்மை நடத்துகின்ற இறைவனைப்பற்றி அறிதல். அதன் பின் இறைவனுக்கும் எமக்கும் இடையில் இருக்கும் தடைகளைத் தெரிந்து கொள்ளல். நாம் இவ்வுலகில் உள்ள அனைத்தையும் பற்றி அறிந்து கொள்வதற்குப்படாத பாடுபடுகின்றோம். ஆனால் நம்மைப்பற்றி ஆராய நாமே நமக்கு அனுமதி கொடுப்பதில்லை. அநேகர்களுடைய வாழ்க்கையும் அதன் செயற்பாடுகளும் தூக்கி எறியப்

(6ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதை

# விடியலைத்தேடி.......

இயற்கை வளங்கள் நிறைந்த பசுமையான செடிகளையும், கொடிகளையும் கொண்ட அழகிய கிராமம் அது. அங்குதான் சண்முகத்தின் குடிசையானது கிராமத்தின் எல்லைப்புறத்தில் அமைந்திருந்தது. குடிசையின் ஓலை வரிசைகளினால சூரியஒளி உட்தர விஸ்றி உட்பிரவேசித்தது. காலைக்கதிரவனின் ஒளியானது குமாரின் கண்களில் எரிச்சலை மூட்டியது. ஆனால் ஒளியினை ஈடு செய்வதற்கு உலகின் எல்லையில் இருந்து வந்த வசந்தமான இளந்தென்றலானது குமாரின் கண்களின் நித்திரையை அள்ளிச் சொரிந்தது குமார் தாயின் கந்தல் சேலையினை தனது உடல் முழுவதிலும் இழுத்து மூடிக் கொண்டான்.

"டேய், தம்பி குமார் எழும்படா.... காலைக் கோழி கூவி இவ்வளவு நேரமாச்சு. படுக்கையால எழும்பி முகம், கை கழுவி விட்டு வா, நான் தேத்தண்ணியை ஊத்தித் தாறன். குடிச்சிட்டுப் படியடா....."

தாயின் பாசக்குரல் காற்றில் தந்தியாக மாறி குமாரின் காதில் ஒலித்தது. குமார் கண்களை கசக்கியவாறு சோம்பலை முறித்து நித்திரையில் இருந்து எழும்புகிறான். அவன் படுத்து உறங்கிய கிழிந்த ஓலைப்பாயினை ஒரு புறம் சுற்றி வைக்கிறான். மறுபுறம் தாயின் கந்தல் சேலையினை பக்குவமாக நான்கு மடிப்பாக மடித்து வைக்கின்றான். பின்பு குமார் காலைக் கடன்களை முடித்துவிட்டு, தாய் கொடுத்த தேனீரை சர்க்கரையுடன் குடித்து விட்டு தனது கல்வி நடவடிக்கையை மேற் கொண்டான் குமாரின் தாயான பார்வதி ஈரவிறகுடன் அடுப்பில் போராடிக் கொண்டிருந்தாள்.

"இந்த பாருங்கோ ஈரவிறகை வாங்கிக் கொண்டு வந்திருக்கிறியள், பார்த்து காய்ந்த விறகாக செல்லையாவின் விறகுக்காலையிலே வாங்கி வந்திருக்கலாமே, சும்மா காசை மண்ணாக்கிறது தான் உங்களுக்கு வேலை. அவன் கடைக்காரன் ஈரவிறகை கட்டியடிச்சுப் போட்டான்" இதயத்தில் இருந்த துக்கத்திலும் மனவேதனையாலும் சண்முகத்தை பேசித் தீர்த்தாள் பார்வதி.

"இந்த யுத்த காலத்தில், உனக்கு சோறு சமைக்க விறகு நான் எங்க வாங்கிறது நாங்கள் முந்தி யாழ்ப்பாணத்திலே இப்படியா சீவிச்சனாங்க. குறைந்த விலையில சாமானும், உடம்புக்கு தென்பான சாப்பாடும் சாப்பிட்டனாங்கள். இப்ப இந்த யுத்தத்தினால ஒரு கோப்பை கஞ்சியை கூட குடிக்க வழியில்லாமல் இருக்கிறம் இது நாங்கள் தமிழனாப் பிறந்த தலைவிதி...." மனதுக்குள் இருந்த விரக்தியையும் மனவேதனையையும் சண்முகம் தனது மனைவிக்கு மாரிகால மழையாக பொழிந்தார்.

குமாரும் தன் கற்றலை மேற்கொண்டு விட்டு பாடசாலைக்கு செல்வதற்கு ஆயத்தமானான். குமாரின் தந்தையரான சண்முகம் தனது கூலிவேலையினை செய்வதற்கு ஆயத்தமாகி தனது கோடாரியினையும் எடுத்துக் கொண்டு வீட்டில் பணமில்லாததால் காலை உணவினையும் உண்ணாமல் கூலி வேலைக்குச் செல்கின்றான். குமாரும் குடும்ப வறுமை காரணமாக காலை குடித்த தேனீருடன் வெறும் வயிற்றுடன் பாடசாலைக்கு விரக்தியுடன் சென்றான்.

குமாரின் குடும்பம் அம்மா, அப்பா அண்ணா, அக்கா, தம்பி, தங்கை என ஒரு பெரிய குடும்பந்தான். ஆனால் வறுமையின் அகோரத்தால் சதா போராடிக் கொண்டிருக்கும் அந்தக் குடும்பம் ஒவ்வொரு நாளும் தங்களது வயிற்றினை அரையும் குறையுமாக வே நிரப்பிக் கொண்டனர். சில வேளை சண்முகம் கூலி வேலையில் பணம் ஒன்றும் சம்பாதிக்காவிட்டால், சண்முகம் குடும்பமே பட்டினி தான். இப்படி ஒவ்வொருநாளும் சிறுமையின் அகோரத்தால் வாடிக் கொண்டிருந்தது அந்தக் குடும்பம். எல்லாம் அவர்கள் தமிழனாய்ப் பிறந்த தலைவிதிதான்.

இவ்வாறான விதமாக காலங்கள் உருண்டு ஓடின. குமார் உயர்தர பரீட்சைக்கு தோற்றுவதற்காக, யாழ். மத்திய கல்லூரியில் ஆர்வத்துடன் படித்து வந்தான். தனது கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் பாடநூல்களை வாங்குவதற்கும், தகப்பனிடம் பணத்தினைக் கேட்டால் இல்லை என்று பதில் வரும். இதனால் பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களாலும், அதிபரினாலும், அடிகள், உதைகள், ஏச்சுக்கள், இவற்றினை வாங்கி தனது சக மாணவர்களிடையே ஒதுக்கப்பட்டவனாகவும், அருவருக்கக் கூடியவனாகவும் இருந்தான் குமாரினைக் கண்டு நண்பர்கள் கேலிகள் செய்து கதைத்தார்கள். உடலில் எழுந்த மிகுந்த கோப அக்கினியை தன் மனதிற்குள் அடக்கியவனாக, சதா வறுமை என்னும் அரக்கனோடு போராடிக்கொண்டு இருந்தான்.

"வழியில்லாதவையெல்லாம் ஏன் பிள்ளைகளைப் பெறவேண்டும். பெத்துப்போட்டு இப்படி சீரழிய விடுகிறதைக்காட்டிலும் பிறந்த வீட்டுக்குள்ளே கள்ளிப்பாலைக் கொடுத்து கொன்று போட்டிருக்கலாமே, பாரன் தரித்திர ஆட்டம் ஆடுதுகள். இதுகளுக்கு என்ன வேதனை விளங்குமோ? தாயிலும் கெட்ட நாய்கள் ஒன்று இரண்டையா பெத்துதுகள். எலிக்குஞ்சுகள் ஆறைப் பெத்து.." என்று தாயினை பேசித் தீர்க்க வேண்டும் என எண்ணி மனதில் எழுந்த கோப ஆவேசத்தை வலுக்கட்டாயமாக அடக்கியவனாக நித்தம் வாழ்ந்தான். சோதனைகளும் வேதனைகளும் செக்கு மாட்டினைப் போல சுற்றிச்சுற்றி துன்பம் விளைவித்தது. தகப்பன் கொண்டுவரும் பணமானது ஒரு நேரச் சாப்பாட்டிற்கே அவனது குடும்பத்திற்கு போதாது. அவனது கல்வி நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு பணம் பற்றாக்குறையாகவே இருந்தது. அவன் தனது மனதில் தன்நம்பிக்கையுடனும் விடாமுயற்சியுடனும் படிப்பதற்கு மனதினை திடப்படுத்திக்கொண்டான். அவன் தனது கிராமத்திலுள்ள ஒரு பத்திரிகைக் கடையில் பாடசாலை செல்வதற்கு முன் பத்திரிகையினை எடுத்துச் சென்று கடைக்காரருக்கும், பத்திரிகை வாடிக்கையாளருக்கும் விற்று அதன் மூலம் கிடைக்கும் பணத்தினைக் கொண்டு, தனது உயர்தரக் கல்விக்கு தேவையான புத்தகங்களையும் பாடசாலை உபகரணங்களையும் வாங்கி தன்னம்பிக்கையுடன் படித்து வந்தான்.

குமார் பாடசாலையில் மிகவும் கல்வியில் சிறந்த மாணவனாக முன்னேற்றமடைந்தான். இவ்வாறு காலச்சக்கரமும் உருண்டோடியது. குமார் தனது குடிசையில் உள்ள திண்ணையில் உட்கார்ந்து வானொலியில் சினிமாப்பாடலைக்கேட்டு இரசித்துக் கொண்டிருந்தான். பார்வதி தன் காலை வேலைகளைச் செய்து கொண்டிருந்தாள்.

"டிரிங்....டிங்..... டிரிங்....டிங்...."

"குமார் யாரோ படலையிலை பெல் அடிக்கினம் போய்பாரடா......." என தாயின் குரலினைக் கேட்டு வானொலியில் மூழ்கிக் கிடந்தவன் திடுக்கிட்டு எழுந்தான். வானொலியினை முடக்கிவிட்டு குடிசையின் வாசலில் குனிந்தவனாக வெளியே வந்தான். நிமிர்ந்தால் கூரை இடிக்கும். அங்கு தபால்காரன் ஒரு கடிதத்தினை குமாரின் பெயரினைக் கேட்டு அவனிடம் ஒப்படைத்து விட்டு தனது கொப்பியில் குமாரிடம் கையொப்பமும் வாங்கிக் கொண்டான்.

கடித உறையினை பிரித்து கடிதத்தினை எடுத்தான். அங்கு அவனுக்கு ஒரு நல்ல செய்தி காத்திருக்கிறது. குமார் உயர்தர பரீட்சையில் கலைப்பிரிவிலே விசேட சித்தியான "3A" இனைப் பெற்று மாவட்ட ரீதியாக ஐந்தாவது இடத்தினைப் பெற்றுக் கொண்டான். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உயர்கல்வியினைப் பெற்று பட்டதாரியாவதற்கு பல்கலைக்கழக விண்ணப்ப படிவத்தைக் கண்டு மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினான்.

இந்த மகிழ்ச்சியான செய்தியினை அறிந்த அவனது தாய், தந்தை, சகோதரர்கள் எல்லாரும் மகிழ்ச்சியில் ஆரவாரித்தனர். பார்வதி ஆனந்தக் கண்ணீருடனும், சண்முகம் மட்டில்லாத மகிழ்ச்சியிலும் ஆரவாரித்தனர். சண்முகத்திற்கு பெருமையாக இருந்தது.

"என்னுடைய மகன் பட்டதாரியாகப் போகிறான்" என ஊர் முழுவதும் பெருமிதத்துடனும், மகிழ்ச்சியுடனும் சொல்லித்திரிந்தார். இனி குமாரின் குடும்பமானது ஒரு ஒளிமயமான விடியலைத்தேடி வெற்றி நடைபோடப்போகிறது.

இனி குமாரின் வீடு குடிசை அல்ல மாளிகை வீடு.

முற்றும்

(யாவும் கற்பனை அல்ல)

அ. வினோத் [illegible]
ஆனைக்கோட்டை.

# கவிதைச் சரம்

## ஓயுமா...?

ஓயுமா? யுத்தம்
ஓயாத மக்களின் ஓட்டம்
குண்டுகள் வீசுவதால்
குருதி பெருகும் வெள்ளம்
தரித்து நிற்க நிழல் இல்லை
தாகம் தீர்ப்பவர் யார்?
உறவுகள் அழிக்கப்பட்டு
உடமைகள் சிதைக்கப்பட்டு
உயிர்கள் துடிக்கின்றன
ஓயாத அலைகளாய் ஓடுகின்றோம்
ஓயாது ஓடும் ஓட்டம்
பெரும் நிலப்பரப்பில் இருந்து ஓயாது ஓடுகின்றோம்
எமது உயிரைக்காக்க
விடியலின் நாயகனே
விரைந்து நீ வருவாயோ
ஓயாத வெடிச்சத்தம்
எமது இதயத்தை துளைக்கின்றது
ஓயுமா?? யுத்தம்

இ. [illegible]
[illegible]

## துயரங்கள்!

இதழ்கள் விழுந்தால் மலரின் துயரங்கள்
ஈரமில்லாத மரங்களின் துயரங்கள்
காற்று இல்லா மனிதரின் துயரங்கள்
இசைகள் இல்லா கலைஞரின் துயரங்கள்
கூடு இல்லா குருவியின் துயரங்கள்

வீடு இல்லாத குடும்பத்தின் துயரங்கள்
நாடிழந்த இனத்தின் துயரங்கள்
பெற்றோரை இழந்த குழந்தையின் துயரங்கள்
கல்வியை இழந்த மாணவரின் துயரங்கள்
மாணவனை இழந்த பள்ளியின் துயரங்கள்

விழுதுகள் வேர்கள் சாய்ந்ததில் துயரம்
இன்னல்கள் கண்டு கொதிக்கையில் துயரம்
பறவைகளை எண்ணி நினைக்கையில் துயரம்
பட்டு சிந்திய குருதியின் துயரம்
அன்றோ அன்னை மடியில் மலர்ந்த துயரம்
இன்றோ அன்னை மண்ணில் மடியும் துயரம்

ம. ஜெயராட், நெடுந்தீவு

## மறைந்த சூரியனில் உதயமாகுமா?.....

வழிசிதறிய ஆடுகள் போல
வழிகாட்ட யாரும் அற்றவர்களாய
ஒருவேளை உண்டிக்கு
உடுக்க உடைக்கு - ஏன்
சுவாசிக்கக் கூட முடியாத - வன்னியின்
சுதந்திரமான வாழ்விதுதானா?

பங்கர்களே எம்மவர்களின்
பங்களாக்கள் இன்று
ஒருவேளையேனும் உண்டாம் தான்
உயிரேனும் ஊசலாடும்
காட்சிக்கு வைக்கும் என்புக் கூடுகளாய்
கேவலமாகியுள்ளார்களே...

காட்டுமிராண்டித் தனமும்
கடும் போக்குச் செயல்களும்
கேட்பாரற்று உயிர்களும்
காவுகொண்டு குருதி வெள்ளம்
ஆறாய் பெருகி யோட
ஆறுதலுக்கு யாருண்டு அங்கே?

இரத்த வெள்ளத்தில் துடிக்கும்
இரத்த உறவைக் கண்டு
இருதயம் வெடிக்க
இயல்பு நிலை மறக்க
ஈவிரக்கமற்ற இந்த
இன விரோதிகளை என்ன செய்வது?

கவலைகள் அலைகளாய்த் தான்
கதைகளாய் அல்ல
கண்டவுடனே ஓலமிட்டு
நன் மனச்சுமை இறக்கத்துடிக்கும்
தமிழன் ஒவ்வொருவனின்
தனியன்பை எப்படிச் சொல்வது.

வளமான நாடாயிருந்த
வன்னி நாடானது - இன்று
செத்த பிணக் குவியல்களாய்
சுடுகாடாகி விட்ட நிலையில்
மீண்டும் ஒரு யுகம்
மறைந்த சூரியனில் உதயமாகுமா?....

ஜீ. ஆன்ஷேர்மிலா
தேவர்கட்டு ஆலயம், நவாலி.

## பூமியில் பொலிகும் புண்ணியப் பேரொளி!

பூமியில் பொங்கும் புண்ணியப் பேரொளி
பாரினை எம்மை பரிவாய் நோக்கினை
[illegible]
[illegible]

தேவனின்! [illegible] மறையும்
ஆவியின்! [illegible] உறையும்

அந்தை [illegible]
[illegible]

தேவம் அன்பால் [illegible]
பாயும் [illegible]

ஆதிக்க [illegible] ஆண்டு
நீதியும் [illegible]

[illegible] அழுதும் நிந்தனை
கருசில் [illegible] கரத்தில் ஏந்தனா

உணர்ச்சிக் கூத்தில் உடல்கள் எரித்த
அதிர்ச்சித் தனங்கள் [illegible]

வாய்மை நேர்மை தூய்மை பெருகும்
[illegible] நெஞ்சின் [illegible] தீரும்

அந்நிய [illegible]
உக்கிர [illegible]

[illegible] உள்ளம் உருமாறி [illegible]
[illegible]

புத்தொளி [illegible] வழி பிறக்கும்
[illegible]

[illegible]

# கைக்கூக் கவிதைகள்

## விலைவாசி

ஜனநாயகப் பெண்மணியின்
மார்பில் - விலையேற்றப்பாலே
சுரந்து கொண்டிருப்பதால்
ஏழைக்குழந்தைகளே....
ஏக்கச்சக்கமாகி விட்டன!

## பட்ஜெட்

வியாபாரிகளும் - அவசியப்
பொருட்களை......
விற்பனைக்கின்றி
விதைகளாக்கி விடுகின்றார்கள்!
வரவு செலவுத்திட்ட
[illegible] வரை!

## சமத்துவம்!

தாழ்த்தப்பட்டு....
ஒடுக்கப்பட்டு....
வாழ்ந்த.... அந்த
குடிசைத்தாயின்
குழந்தைக்கு
வறுமை
பிரசவத்தில் இருந்தே
பழக்கப்பட்டது!

## கட்டம்!

நீதிக்குதிரைகளில்
சவாரி செய்கின்றோம்!
ஏனோ.... அடிமைகளை
ஏறி மிதித்துக் கொண்டு.....

வி. [illegible]
நெடுந்தீவு -15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாயிறு தியானத்துளிகள்

அருட்திரு.
யே. அ. அருள்தாசன்

## மூவொரு கடவுள் பெருவிழா

"ஒற்றுமையே பலம் என்பதே திருத்துவம் எமக்குக் காண்பிக்கும் தத்துவம்"

"எனவே நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள், தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள்" (மத்28:19)

பாஸ்கா காலம் நிறைவுற்ற பின் தூய ஆவியார் பெருவிழாவிற்கு அடுத்த ஞாயிறாகிய பொதுக்காலத்தில் மூவொரு இறைவன் பெருவிழா கொண்டாடப்படுகிறது. இப்பெருவிழாவிலே இறைவனைப்பற்றிய ஆழமான உண்மை கற்பிக்கப்படுகிறது. இறைவார்த்தையை அடிப்படையாகக் கொண்டு இறைவன் தம்மகத்தே மூன்று ஆட்களும் ஒருவருமாயிருக்கின்றனர் என்பது வெளிப்படுத்தப்படுகிறது. தந்தை, தாய், பிள்ளை என்ற மூன்று சாராரும் ஒன்றிணைந்து ஒரு குடும்பம் ஆவது போல, தந்தையாம் இறைவனும், மைந்தனாம் இயேசுக்கிறிஸ்துவும், தூய ஆவியாரும் தனித்துவமான மூன்று வெவ்வேறு ஆட்களாக இருந்தாலும் அவர்கள் மூவரும் இணைபிரியாத ஒரே 'கடவுளாக ஒரே வல்லமையிலும், ஆற்றலிலும், மகத்துவத்தில் சமத்துவமாக உள்ளனர். இத்தத்துவமானது மனித அறிவாற்றலால் அறிந்த ஒன்று அல்ல, மாறாக இறை வெளிப்பாட்டால் தெளிவாக வெளிப்படுத்தப்பட்ட ஒன்றாகும். மூவொரு இறைவனின் பெருவிழாவானது ஒன்றிப்பின் விழாவாகவும், அன்பின் பெரு விழாவாகவும் திகழ்கின்றது. திரித்துவம் அன்புச்சமூக ஒன்றிப்பைப் பிரதிபலிப்பதால் தான் நாம் கடவுள் அன்பாய் இருக்கிறார் என்கின்றோம். "அன்பில்லாதோர் கடவுளை அறிந்து கொள்ளவில்லை. ஏனெனில் கடவுள் அன்பாய் இருக்கிறார்." (1 யோவான் 4:8).

மீட்புத்திட்டமானது இறைவன் பின் வெளிப்பாடாகத் திகழ்கின்றது. பாவம் செய்து இறையன்புறவை இழந்த மனிதனை மீட்க அன்பே உருவான இறைவன் தன் அன்பு மகனையே கையளிக்கத் திருவுளம் கொண்டார். "நாம் வாழ்வு பெறும் பொருட்டுக் கடவுள் தம் ஒரே மகனை உலகிற்கு அனுப்பினார். இதனால் கடவுள் நம்மீது வைத்த அன்பு வெளிப்பட்டது". (1யோவா 4:9).

இத்தகைய அன்புருவான இறைவனின் சாயலில் படைக்கப்பட்ட மனிதனும் தம்முள் அன்புச் சமூகமாய் வாழ வேண்டுமென்பதே இறைவனின் திருவுளம். எனவேதான் "கடவுள் ... மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று, அவனுக்குத் தகுந்த துணையை உருவாக்குவேன்" என்றார். (தொ.நூ 2:18). ஆண் பெண் எனக் குடும்பமாக அன்பினால் ஒன்றித்து, சகோதர சமூக உறவிலே பிணைக்கப்பட்டு பிளவு நீக்கி உத்தமர்களாக வாழ்வதே உன்னதமான கிறிஸ்தவ வாழ்வாகும். மனித இதயங்களில் சுரக்கும் அன்புக்கு மூவொரு கடவுளே ஊற்றாகும். "ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் அருளும், கடவுளின் அன்பும் தூய ஆவியின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக!" (2 கொரி 13:13), என்று தூய பவுல் அடியார் கொரிந்திய மக்களை இம்மூவொரு கடவுளின் பெயரால் வாழ்த்துவது ஒவ்வொரு கிறிஸ்தவனதும் உள்ளார்ந்த வாழ்வாக அமைய வேண்டி ஒவ்வொரு திருப்பலியின் பயனும், அன்பு நிறைந்த வாழ்வாக அமைய வேண்டியே இத்திரித்துவ வாழ்த்து திருப்பலியின் ஆரம்ப வாழ்த்தாக அமைந்துள்ளது. திருமுழுக்கே கிறிஸ்தவ வாழ்வின் ஆரம்பமாகும். அது திரித்துவத்தின் பெயராலேயே திருமுழுக்கு அளிக்குமாறு அவர்களை அனுப்பினார். "தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்கு கொடுங்கள்" (மத் 28:19).

அன்பில்லாத வாழ்வு, கிறிஸ்தவ வாழ்வு மட்டுமல்ல மாறாக அது உண்மையான மானிட வாழ்வாகவும் அமையா. எங்கே அன்புள்ளதோ அங்கே உறவுண்டு. எங்கே உறவுள்ளதோ அங்கே ஒன்றிப்பும் அதனால் வளர்ச்சியும், வாழ்வும் உண்டு. எம் வாழ்வை வளர்ச்சிப் பாதையில் வளம்படுத்த அன்பினை விதைத்து உறவினை வளர்த்து வாழ்வினைப் பயனாக பெற்று இனிதே மகிழ்வுடன் வாழ்ந்திடுவோம்.

## ஆண்டவரின் திருவுடல் திரு இரத்தப் பெருவிழா

தாய் சொட்டும் குருதி குழந்தைக்கு அமுதமாகும். தந்தை சொரியும் குருதி குடும்பத்திற்கு வியர்வையாகி உழைப்பாகும். இயேசு சிந்திய இரத்தம் பாவம் கழுவும் உயிரின் ஊற்றாகும்.

"பின்பு அவர் கிண்ணத்தை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி அவர்களுக்குக் கொடுத்தார். அனைவரும் அதிலிருந்து பருகினர். அப்பொழுது அவர் அவர்களிடம், "இது எனது உடன்படிக்கையின் இரத்தம், பலருக்காகச் சிந்தப்படும் இரத்தம்." (மாற்14:23,24) என்றார்.

கிறிஸ்தவ வாழ்வின் உயிர் மூச்சாகவும், மையமாகவும் துலங்குவது நற்கருணை ஆகும். இத்தகைய அருட்சாதனமாகிய ஆண்டவரின் திருவுடல் திரு இரத்தத்திற்கு பெருவிழா எடுத்து நற்கருணையில் வீற்றிருக்கும் இயேசுக்கிறிஸ்துவின் மீது கொண்டிருக்கும் பக்தி வணக்கத்தையும் ஆராதனையையும், அன்பையும் கத்தோலிக்க விசுவாசிகளின் இதயங்களில் ஆழப்படுத்தி உறுதிப்படுத்த இப்பெருவிழா திருத்தந்தை நான்காம் உர்பன் அடிகளால் பிரகடனம் செய்யப்பட்டது. இப் பெருவிழாவானது இயேசு ஆண்டவரின் எல்லையில்லாத் தியாகம் மிக்க அன்பின் பரிமாணத்தை நாம் உணர்ந்து அதற்கு நன்றி செலுத்துவதாகவும் அமைந்துள்ளது. திருச்சபையின் இருப்பானது தூய தேவ நற்கருணையிலேயே நிலை நிறுத்தப்பட்டு கிறிஸ்துவின் நிலையான பிரசன்னம் மனிதகுலத்தோடு இருக்கிறது என்பது மறைக்கப்படாத உண்மையாகும். "இதோ உலகு முடிவு வரை நான் உங்களோடு இருக்கின்றேன்." (மத் 28:20).

கிறிஸ்துவின் திருவுடல், திரு இரத்தக் கொண்டாட்டமானது இடைவிடாது கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்ட உலகில் வியாபித்திருக்கிற மக்களை இறையாட்சிக்காக ஒன்றுபடுத்தி, திருச்சபையானது கிறிஸ்துவில் கொண்டுள்ள நம்பிக்கைக்குப் பெருந்திரளானவர்களாயிருக்க அடித்தளமாய் அமைந்துள்ளது.

நற்கருணையானது உறவின் நல்விருந்தாகவும் பெருவிருந்தாகவும், ஒன்றிப்பின் பிணைப்பாகவும் அமைந்துள்ளது. கிறிஸ்துவோடு நற்கருணை வாயிலாக உடலோடு உடலாகவும் திருஇரத்தத்தோடு ஒன்றாகி இரத்தமாகவும் கிறிஸ்தவர்களாகிய நாமனைவரும் அவரோடு ஒன்று கலக்கவும், சகோதர பகிர்வையும், பாசத்தையும், நேசத்தையும் விதைத்து மன்னிப்பினால் ஒப்புரவையும் ஊட்டுவதாக இவ் மாண்புமிக்க அருட்சாதனம் மிகுந்த இறை அருளால் அமைந்துள்ளது. திருச்சபைக்கு அணிகலன்களாகவும், விசுவாச வாழ்விற்கு நற்சான்றுகளாகவும், முன்மாதிரிகையாகவும், திகழ்ந்த எண்ணற்ற புனிதர்களுக்கு தம் இடர்மிக்க, சவால்கள் செறிந்த துன்பங்கள் சூழ்ந்த இவ்வுலக வாழ்க்கைப் பயணத்தில் ஆன்மாவிற்கு உரமூட்டி, திடம் கொடுத்து வலுப்படுத்தியது நற்கருணையே என்பது வெளிப்படையான பேருண்மையாகும். ஆகவே தான் இதை எண்பிப்பதற்காக, புனிதர்களுக்கு விழா எடுத்து இறைவனுக்குப் புகழ்ச்சிப் பலி செலுத்துவதற்கு முன்னைய நாள் நற்கருணைப் பெருவிழாவாக சிறப்பிக்கப்பட்டு வருகிறது.

நற்கருணை, திரு இரத்தம் என்பன வெறுமனே கொள்கைக்கும், கோட்பாடுகளுக்கும், உட்பட்ட ஒன்றல்ல மாறாக இது வாழ்வுக்கான வழிமுறை, வாழ்வின் உண்மைப் பொருள் உலக மகா சக்தியான இறைவனின் திருவுரு. அதை பக்தி வணக்கத்தோடும், பூரண உடல் ஆன்ம ஆயத்தத்தோடும் ஆவலோடும், தகுதியான உள்ளத்தோடும் பெற்றுக் கொள்வதே ஆன்ம ஈடேற்றம் நல்கும், பயனுள்ள வழிமுறையாகும்.

"எனவே ஒவ்வொருவரும் தம்மையே சோதித்தறிந்த பின்னே இந்த அப்பத்தை உண்டு கிண்ணத்தில் பருக வேண்டும். ஏனெனில், ஆண்டவருடைய உடல் என உணராமல் உண்டு பருகுபவர் தம்மீது தண்டனைத் தீர்ப்பையே வருவித்துக் கொள்கிறார்." (1கொரி 11:28,29).

நற்கருணை என்பது பழக்க தோஷத்தோடு நாளாந்தம் பெறும் வெறும் பிரசாதம் அல்ல. அது எம்மிலே தூய்மையையும், ஆன்ம சுவிசேஷத்தையும் பெற்றுத்தரும் ஆன்மீக நல்விருந்து. இதைப் பெற்றுக் கொள்பவர் தம்மகத்தே கிறிஸ்துவுக்குப் பிரமாணிக்கமான நல்வாழ்வை தூய்மையாக்கிக் கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு உட்படுகிறார். ஆகவே நற்கருணை பெறுவோன் பிறரை மன்னிக்க வேண்டும். மற்றவர் நன்மை பெற தன்னால் முடிந்ததைச் செய்யவே செய்யவும் வேண்டும். பிரிவினை உள்ள இடத்தில் ஒப்புரவை ஏற்படுத்தவும் உழைக்க வேண்டும். இவ்வாறு பெறுகின்ற நற்கருணைக்கு ஏற்றபடி வாழ்வையும் அமைத்தல் வேண்டும்.

**பாரவோன் அரசு......** (3ம் பக்க தொடர்ச்சி)

தற்போதைய பாரவோன் அரசு அரச சார்பற்ற தொண்டர்கள் அனைவரையும் வெளியேற்றி விட்டு உலக நாடுகளையும், தன் இனத்தையும் பொய் மாயைக்குள் சிக்கவைத்து வன்னி இஸ்ரயேலரை அடிமைப்படுத்தி, கொடுமைப்படுத்தி கொலை செய்கிறது.

எவ்வளவுதான் தாண்டவம் ஆடினாலும் கடவுளின் திட்டத்தை யாராலும் அசைக்கவோ அல்லது மீறவோ முடியாது. ஏனெனில், "ஆண்டவராகிய இறைவா, நீர் விரைவில் சினமுறாதவர் பேரன்பும் உண்மையும் செறிந்தும் கொண்டவர்" (தி.பா 86:15). என்ற திருப்பாடலாசிரியரின் கூற்றுப்படி, நாம் பொறுத்திருந்து இறைவனுடைய வல்லமையை காண எம்மை தயார் படுத்த வேண்டும். இந்த தவக்காலத்தில் இறைவனுடைய பாடுகள், மரணத்தை தியானிக்கின்ற நாங்கள், அதே பாடுகள், மரணம், வேதனைகள் என்பவற்றை ஒவ்வொரு நாளும் கிறிஸ்துவுக்காக சுமந்து செல்லுகிற எங்களுடைய இஸ்ரயேல் உறவுகளினுடைய வர்ணிக்க முடியாத அவலங்களையும் எங்களது மனங்களிலே சுமந்தவர்களாக அவர்களுடைய விடுதலைக்காக இறைவனை மன்றாடுவோம். கிறிஸ்துவின் உயிர்ப்பு அம்மக்களின் "விடுதலை" என்னும் உயிர்ப்பையும் கொண்டுவர இடைவிடாமல் செபிப்போம்.

அருட்சகோதரன் ம. அ. பரிஸ்கரன்,
ஆரம்ப செய்பிலகம்

## காவலன் கண்மணிகள்

### பரிசுத்த பாப்பரசர் இரண்டாம் யோவான் பவுலும் மரியன்னையும்



தாங்கிப் பிடித்த கரங்கள் - குடு
வாங்கித் தவித்த தந்தையை
ஏங்கித் கலங்கும் இதயங்கள்
வீங்கி வெடிக்க முன்னர்
தாங்கிப் பிடிக்க வாராய் - தாயே
தயவாய்க் கேட்கின்றோமே!

### அன்னைக்கு என் மதிப்பு

ஈரைந்து மாதம் சுமந்து
இரத்தத்தை உணவாக்கி
பெற்றெடுத்த தாய்க்கு
என் முதல் மதிப்பு!

என் மன வாசலில்
ஏற்றி வைத்த என் தீபம்
என் இதயத்தை உனக்கென
செதுக்கி வைத்தேன்!

என்றும் நீ எனக்காய் இதுவரை
செய்த நன்மைகள் போதுமம்மா
உனக்கு நன்றிக்கடனாய்
எதை நான் அர்ப்பணிப்பேன்

### முடிந்தால் முயன்று பாருங்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ம | ஜெ | சி | யா | டா | ரு | யா | ஜ |
| ஒ | ஸ் | ரி | ன | க் | ஷ் | பெ | னா |
| கை | சீ | வ | னா | ர் | பி | சி | ன் |
| த் | கி | ஸி | யா | ஈ | ரா | க் | ல் |
| ஈ | யூ | ர் | ரா | கி | ன் | ரே | ஜெ |
| கி | பா | ன் | மா | ஒ | ஸ் | யா | ர் |
| ஸி | யா | து | ங் | ஐ | பி | தா | ம |
| சி | இ | த் | தா | லி | ஆ | டா | ஸ் |

இந்த பெட்டியினுள் 20 நாடுகளின் பெயர்கள் உள்ளன. இவை மேலிருந்து கீழாகவும், கீழிருந்து மேலாகவும், பக்கவாட்டிலோ, பின்னிருந்தோ முன்பாகவோ, முன்னிருந்து பின்னாகவோ, குறுக்காகவோ உள்ளன.


உதாரணம்: ஈரான்.

(விடை அடுத்த இதழில்)

ஜெரோம் ஹட்சா
குருநகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவன் வாழும் ஆலயம்



இறைவன் இருக்கின்றான்.

ஆலயத்துள் குடிவைத்து தினம் ஆராதித்து வழிபட்டு வாழ்த்துவதற்காக, தேடி, ஓடி வருகின்றோம். எத்தனை ஆண்டுகள் இறைவனிருக்கும் பீடம் அழகாக அலங்கரிக்கப்பட்டு, மனதுக்கு மகிழ்ச்சியளிக்கக்கூடியதாக இருப்பதை உணரும் போது அங்கே இறைவனின் ஏதோவொரு உணர்வை நாமும் பெறுகின்றோம். அவ்விடத்தில் வழிபாட்டின் வாயிலாக, பூஜைவழியாக இசைகளின் ஸ்வரங்களில் இப்படி எத்தனையோ வழிகளில் இறைவனுடன் இரண்டறக் கலக்க முயல்கின்றோம். அப்படி நமக்கும் இறைவனுக்கும் நெருக்கத்தையும் தரும் ஓரிடம் வெறும் ஜோடனைகளால் மட்டும் அலங்கரிக்கப்பட்டிருந்தால் போதாது. மனங்களும் அழகாக இருக்க வேண்டும், என்று வார்த்தைக்கு வார்த்தை சொல்லி, மனங்களைத் தட்டி நல் நெறிப்படுத்துவது மரபு.

அந்த மாதிரியான ஆலயம் எப்படி பராமரிக்கப்பட வேண்டும். அகம் போல புறம் பாதுகாக்கப்பட வேண்டியது முக்கியமல்லவா? மெழுகுதிரி பத்தவைக்கால் நீலம் அழுக்காகிவிடும் சுவர்களில் கரைபடிந்து விடும் அதற்கான அறிவித்தல் ஒழுங்குபட்டு உட்சுவரில் மாட்டப்பட்டிருக்கும், கையடக்க தொலைபேசி பாவனைக்குத் தடை சொல்லி, அதற்குரிய அறிக்கை பொறிக்கப்பட்டிருக்கும், திருடர்களுக்கும் ஜாக்கிரதை என்கின்ற அறிவிப்பு.

ஆனால் பரிசுத்தமான கடவுளை, தூய்மையாக வைத்திருப்பதாக நினைத்திருக்கும் அவர் பதியும் இல்லத்துள் பாதணிகளுடன் நுழைந்து அசுத்தப்படுத்தாதீர்கள் என்று ஒரு வார்த்தைகளைப் போட்டு மாட்ட எவரும் நினைப்பதில்லை. காலணிகளை தாமாகவே நினைத்து கழற்றி வரவேண்டியது ஒவ்வொருவரைப் பொறுத்தது. சாதாரணமாக ஒரு வீட்டுள், உறவினரைப் பார்க்க போனால் கூட பாதணிகளை வெளியே போட்டுத்தான் போக வேண்டும் போவார்கள். ஆனால் தேவாலயத்துள் அப்படியே நுளைந்து விடுகிறார்கள்.

மிருகங்களின் தோலினால் ஆனது, தீட்டானது என்று சொல்ல வரவில்லை, செருப்பு அணிந்திருக்கும் தைரியத்தில் தெருவில் சகட்டு மேனிக்கு வருதளங்கில் நடந்து வந்து அப்படியே கோவிலுக்குள் வரும் போது கூடவே அழுக்கும் சேர்ந்து உள்ளே புகுந்து கொள்கிறது. பக்தர் பணிந்து வணங்கி நிலம் தொட்டு முகம் பதிக்கும் போது அவ்வழுக்கெல்லாம் அம முகங்களில் படிகிறது. இதை எவருமே உணர்வதில்லை.

பிறசமயத்தவர்கள் கூட, தம் ஸ்தலங்களில் பாதணிகளுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் வைத்து போகிறவர்கள், தேவாலயங்களுள் செல்லும் போது அதை கடைப்பிடிக்க நினைக்கிறார்களில்லை.

பாதரப்பட்ட நடைகளுக்கேற்ப ஒலி பொறுப்பட்டும் போது மனசு சஞ்சலப்பட்டு அத்திக்குகளில் பார்வையை ஓடவிடுகிறது. இறைவனை மனாலும், உடலாலும் பணிந்து வணங்க வேண்டும். பாதணிகளை அணிந்து, மிதப்பாக நின்று, விரைப்பாக வணங்குவது அழகல்ல, மண்ணுலகு மன்னனை பார்க்க போகும் போது எத்தனை பணிவு கொண்டு வணங்குவர். மண்ணருக்கும் மன்னனாய், படைப்பின் கர்த்தவான இறைவனை எப்படி வணங்க வேண்டும் என்கின்ற முறையை எவருக்கும் சொல்லித்தெரிய வேண்டுமென்பதில்லை.

இந்தியாவில் கோவிலுள் எவருமே பாதணிகளுடன் நுழைவது கிடையாது. வெற்றுக் கால்களுடன் தான் எவ்விடமும் செல்வார்கள். பார்ப்பதற்கு நிறைவாக இருக்கும், தெய்வத்தின் சந்நிதிக்கு தரும் கௌரவத்தின் மதிப்பை அச் செயல்தான் முதலில் தீர்மானிக்கிறது. இனிவரும் காலங்களென்றாலும் பாதணிகளுடன் உட்செல்லாத முறையை நடை முறைப்படுத்த முன்வரவேண்டும். கண்டபாட்டுக்கு, கால் போன போக்கில் தெருவோர அசுத்தங்களையெல்லாம் மிதித்து வந்து பாதணிகளை வெளியே வைத்து வெற்றுக்கால்களோடு வேந்தவனை வணங்கி வழிபட்டு, கோவில் எனும் புனிதமான இல்லத்தை சுத்தமாக வைத்திருக்க நம் ஒவ்வொருவரும் முழுமனதோடு முன்னேடுத்து செயற்பட வேண்டும்.

பாதணிகள் திருட்டு போகா வண்ணம் அதற்கான ஒழுங்கு முறைகளை ஆலய பணியாளர்கள் முறைப்படுத்தி வழிநடத்தினால் எல்லாமே நன்றாக அமைந்து விடும். செய்வார்களா?

**ஜெ. சூரியன், என். ஜெயமணி,**
**கிரிலப்பன, கொழும்பு - 5**

## நம்மைப் பற்றி.... (3ம் பக்க தொடர்ச்சி)

படுவதற்குக் காரணம் அதிகமான ஆசையே பிறவித் துன்பத்திற்கும் காரணம் அதுவே. ஆசைகளை மனிதன் தூக்கி எறியும் வரைக்கும் மனித வாழ்க்கைக்கு மேலே எமது உறவுகளும் தொடர்புகளும் ஆன்மாவிற்கு மேலாக வரும் போது தொடர்புகளும் உணர்வுகளும் முறிவதை உணர்கின்றோம். ஏனெனில் அளவுக்கு மிஞ்சிப் பேசுதலும் பிறருடன் பழகுதலும் ஆன்மீகப் பாதைக்கு தடையாகவே இருக்கும் என்பதை நாம் எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

மனித வாழ்க்கையில் சோதனைகள் வருவது எங்களைப் பரீட்சிக்கவே. அவற்றிலும் நாம் வெற்றி பெற்று விட்டால் இந்த உலகத்தையே வென்று விட்டோம் என்பொருள். எமது வாழ்க்கையில் ஏற்படும் ஏராளமான இன்பங்களின் நன்மை தீமைகளை அறிந்து கொள்ளாமல் அதில் மூழ்கி நிற்கின்றோம். கரையை நாம் அடையும் போதே எங்களுக்கு பின்னால் வரும் துன்பங்களைக் கண்டு அஞ்சுகின்றோம். பொய்மையும், பொறாமையும் கொடியது. இவை இரண்டும் எந்த ஆன்மாவிற்கும் பிடியாது. வாழ்க்கை என்பது சாதாரணம் அல்ல. அது ஒரு அற்புதமான தீபமே. எங்கள் வாழ்க்கையில் தீய எண்ணங்கள் யாவும் உடனே அகற்றப்பட வேண்டும் ஒரு தீய எண்ணம் ஒருவரிடம் வந்தால் பின் ஆயிரக்கணக்கான தீய எண்ணங்கள் அவனிடம் வந்தே தீரும்.

எங்களில் பலர் நாம் பண்ணுகின்ற தப்புக்கெல்லாம் ஒரு நியாயத்தைக் கற்பித்தால் எதுவுமே தப்பு இல்லை எனப்போய்விடும் என்ற எண்ணத்திலேயே வாழ்கின்றோம். வாழ்வும் துடிக்கின்றோம். குற்றம் செய்ய ஏதாவதொரு காரணம் பின்னணியில் இருக்கலாம். ஆனால் அதற்காக அந்த குற்றத்தை நியாயப்படுத்தக் கூடாது. அதுதான் நீதியின் கோடு. அந்தக் கோட்டைத் தாண்ட முயற்சிக்காதவரை மனிதன் மனிதராகவே இருப்பான். இல்லையென்றால் மிருகமாகிவிடுவான். தப்பில் சின்னதும்பத்தான் ஆனால் அந்த தப்பை திருத்தவில்லையென்றால் வாழ்க்கையே தப்பிப் போய்விடும். அதே நேரத்தில் எதையும் தீர விசாரிக்காது அவசரப்பட்டு கோபித்து நாம் ஒருவர் மீது ஒருவர் சொல்லும் குற்றச் சாட்டால் எவ்வளவு துன்பம் ஏற்படுகிறது. இதை நாம் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

எதிலும் எதிர்ப்பதனால் தீமையே கிடைக்கும். மனம் தளராது வாழப்பழகிக் கொள்ளுங்கள். நாளைய கவலைகளை எண்ணி இன்றைய சந்தோசத்தை பாழாக்கிக் கொள்வதால் சிலவேளையில் நாளை கவலையே வராமல் போய்விடலாம். ஆனால் நீயோ இன்றைய சந்தோசத்தை இழந்து விடுவாய். எங்களுக்கு ஆசை உணர்ச்சி மேலும் எழுவது குற்றமல்ல ஆனால் மீதமிதமான ஆசைகளுக்கு இடம் எமது வாழ்வில் அளிப்பதே கேடு. மனங்கள் எல்லாம் மனங்கள் அல்ல. பண்பட்ட நிலத்தில் தானே விதையின் சக்தி எழுகின்றது. அதுபோல் தூய்மையான பண்பட்ட ஆன்மா ஒருவனுக்கு இருக்குமானால் அவனிடம் அன்பும் பண்பும் முளைவிட ஏது தடை. நாங்கள் எதுவொரு காரியத்தைச் செய்யும் போதும் அதை அன்பில் தொடங்குவோம். அன்பில் செலவளிப்போம். அன்போடு முடிப்போம். நீங்கள் பிறருடைய நட்பைப் பெற அவர்கள் பால் அன்பு செலுத்தினால் மட்டும் போதாது மாறாக நீங்கள் அன்பு செலுத்துவதை அவர்களுக்கு நன்கு உணரச் செய்யுங்கள்.

மனிதர்களாகிய நாங்கள் எந்த அளவிற்கு இறைவனை நாடுகின்றோமோ அந்த அளவிற்கே எம் பலவீனங்கள் எங்களை விட்டு நீங்கிப் போகும் மனிதர்கள் என்று நம்மை நாமே பட்டம் சூட்டிக் கொள்ளும் நாங்கள், பலவிவிடை நற்செயல்கள் புரியாவிட்டாலும் அவர்களுக்கு தீமை செய்யாமல் இருந்தாலே எமது ஆன்மா எங்களை ஓரளவு ஏற்றுக் கொள்ளும். எங்கு பார்த்தாலும் மனிதர்களாகிய நாங்கள் எமக்கிடையே ஏராளமான துன்ப துயரங்களையும் ஏற்படுத்தி அதற்கான பாரதூரமான விளைவுகளை நாமே அனுபவிக்கின்றோம். மாறாக வேறுயாருமல்ல. எங்கள் இன்பத்திற்காகவும் மற்றவர்களை வேதனைப்படுத்தினால் நாம் எமது ஆன்மாவை இறைவன் பக்கம் நகர்த்தி வாழப்பழகி எமது வாழ்வின் கஷ்டத்தை தேடி மனித அழிவிற்கும் துன்பத்திற்கும் முற்றுப்புள்ளி இடுவோம்.

**செ. அமலன்,**
**நாவாந்துறை.**
**(புனித நீக்கிலார் பங்கு)**

# துன்புறும் எம் மக்களுக்கு நம்பிக்கையூட்டி புத்துயிர் அளிக்க வல்லவர் தூய ஆவியானவரே!

**— அருட் சகோ. றமேஸ் அ.ம.தி —**

"உமது ஆவியை நீர் அனுப்பினால் யாவும் படைக்கப்படும் உலகனைதும் புத்துயிர் பெறும்" (திபா 104: 30). ஆண்டவரின் ஆவியானவர் தாம் விரும்பிடமெல்லாம் அசைவாடிக் கொண்டிருக்கிறார். படைப்பின் ஆரம்பத்தில் தண்ணீரில் அசைவாடிக் கொண்டிருந்த தூய ஆவியானவர் இன்றும் உலகின் முகத்தைப் புதுப்பித்துக் கொண்டிருக்கும் ஆற்றலாய், சக்தியாய் எங்களுள் இருந்து செயற்படுகிறார். கிறிஸ்துவின் ஆவியானவரை ஒருவன் கொண்டிராவிடில் அவன் கிறிஸ்தவன் அல்லன். கடவுளின் ஆவியானவரால் யார் இயக்கப்படுகிறார்களோ அவர்களே கடவுளின் மக்கள் (உரோ 8: 14). தூய ஆவியானவர் தான் "இருளின் அதிகாரத்தில் இருந்து எம்மை விடுவித்து" (கொலோ 1:13) ஒளியின் மக்களாக மாற்றினார். ஏனெனில் கிறிஸ்து எனும் தெய்வீக ஒளியை பின்பற்ற வழிகாட்டுபவர் அவர்தான். ஆனால் அவரை பின் செல்லாத காரணத்தினால் இருளில் நடந்தோம் (எபே 5:3-6), இருளின் செயல்களைச் செய்தோம் (கலா 5:19-21). துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் ஆளானோம். வேதனைகளையும், சோதனைகளையும் வாழ்வில் சுமந்து நிம்மதியிழந்தோம்.

மாறி வரும் சமுதாயத்தில் வாழ்கின்ற மக்கள் பல்வேறு தாக்கங்களுக்கு இரையாகின்றனர். திரைப்பட மோகம், அடிமைப்படுத்தும் அரசியல், போதைப் பொருட்கள், கவர்ச்சியைக் காசாக்கும் நாகரீகமோகம் போன்றவை மனிதர்கள் அன்றாடம் சந்திக்கும் பிரச்சனைகள். இவ்வுலகில் பணம் சம்பாதிக்க கற்றுத்தரும் கல்வி; காலையில் இருந்து மாலை வரை நம் உணர்வுகளையும், உள நிகழ்வுகளையும் கையாள்வதற்கு உதவுவதில்லை. இதனால் தான் நாம் பலவிதமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றோம். உள்ளத்தின் ஆழத்திலிருந்து புறப்படும் தேடலின் விளைவாக எமது வாழ்வில் விடைகாணா பல கேள்விகள் தொங்கி நிற்கின்றன. இதற்கு விடையளிக்க வல்லவர் தூய ஆவியானவரே! ஏனெனில் "தூய ஆவியார் எல்லாவற்றையும் ஊடுருவிக் காண்கிறார்" (1கொரி 2:10).

ஆதிக்கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய வாழ்க்கையை தேர்ந்தெடுத்த காலம் முதல் சொல்லொண்ணாத் துன்பங்களும், வேதனைகளும் அவர்களை நெருக்கியதை தொடக்ககால திருச்சபை வரலாற்றில் காண்கின்றோம். இயேசுதான் ஆண்டவராகிய மெசியா என்று சாட்சியம் கூறி உலகில் வியக்குமளவிற்கு பயனுள்ள வாழ்க்கை வாழ அந்த ஆவியின் மக்களுக்கு அக்காலத்தில் உலகம் கொடுத்த பரிசு சித்திரவதைகளும், சிறையறைகளுமாக இருந்தது. பலர் கொலை செய்யப்பட்டார்கள், சிலர் விலங்குகளுக்கு இரையாக்கப்பட்டார்கள், பெரும்பாலானோர் பல தரப்பட்ட வாதைகளுக்கு உட்படுத்தப்பட்டார்கள். எனினும் அவர்களுக்கு அது வேதனையாகத் தெரியவில்லை. ஏனென்றால் அவர்கள் தூய ஆவியானவரோடு பயணித்தார்கள். தங்களில் உறைந்திருக்கும் ஆவியானவருக்காக எதையும் இழக்க தயாராக இருந்தார்கள். நாம் எங்களுடைய வாழ்விலே துன்பங்கள் எழுகின்ற போது பல கேள்விகளை எங்களுக்குள்ளே எழுப்புவது வழக்கம். ஏன் எங்களுக்குத் தான் இவையெல்லாம் வருகின்றன என்று புலம்புவது வழமை. ஏனெனில் பயனுள்ள அர்த்தமுள்ள நல்ல வாழ்வு வாழ்வதனுள் படுகுழிக்குள் தள்ளி விடும் உலகிலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாமும் அதனுடன் ஒத்திசைந்து கொண்டிருக்கிறோம்.

நாளும் துன்ப சுமைகளைச் சுமந்தவர்களாக, கவலையோடும் கண்ணீரோடும், பசியோடும் ஏக்கத்தோடும் விடிவே கிடையாதா என்று வானை நோக்கி வாழ்ந்து கொண்டிருக்கும் எங்களுக்கு தூய ஆவியானவர் உண்மையான விடுதலையையும் அமைதியையும் தரமாட்டாரா? போரின் கொடுமைகளினால் வதைக்கப்பட்டு உயிரைப் பறி கொடுத்த எம் உறவுகளின் வேதனைகள் கூட அக்கறை செய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலையும், மனித மாண்பைப் பற்றி பேசும் இவ்வுலகில் இளம் பிஞ்சுகளின் சதைத்துண்டங்கள் மத்தியில் மரண ஓலங்களின் தாலாட்டில் படுத்துறங்கும் அவல நிலையும், விடுதலை கிடைக்கும் எனும் நம்பிக்கையுடன் அடைக்கலம் தேடிய பதுங்குகுழிகளில் வெடித்து சிதறும் கோடூரமும், வாழ்வில் நம்பிக்கையிழந்து ஒவ்வொரு கண முமாக சாவை தங்கள் ஆதாரமாகக் காணும் மக்களின் சீர் கெட்ட வாழ்வும் நிறைந்திருக்கும் இக்காலத்தில் தூய ஆவியானவர் எங்களுக்கு விடுதலை வாழ்வு தருவாரா? எமக்குப் புத்துயிர் அளிப்பாரா? அமைதித் தென்றலை வீசச் செய்து எம் வாழ்வில் மகிழ்ச்சி தருவாரா? என்பதே எங்கள் ஒவ்வொருவரினதும் ஏக்கமும் எதிர்பார்ப்புமாக உள்ளது.



இறங்கி வந்தவர் புனிதரல்ல, வானவரல்ல, இறைவாக்கினர் அல்ல. பிதாபிதா அல்ல. அனைவருக்கும் மேற்பட்டவர். பிதா வோடும், சுதனோடும் வல்லமையிலும் நித்தியத்திலும் மகத்துவத்திலும் சமமானவர். உலகைப் புதுப்பிக்க, புது வானம் பிறப்பிக்க, துன்ப படுத்த, மீட்க, திருச்சபையைக் கட்டியெழுப்பி வளர்க்க, மறைபரப்பும் போதகர்களோடு இருந்து உதவ, வந்தவர். நிலையாக ஆனால் மறைவாக உலகிலே தங்கியிருக்க வந்தவர். நமது ஆத்துமத்தின் உயிராக, திருச்சபையின் உயிராய் மையமாக வாழ்கின்றார். நம்மைத் தேடி, மனித பயத்தைப் போக்கி, தெய்வ பயத்தை உண்டாக்கி அன்புச் சுடரை ஒளிரச் செய்து, என்றும் எம்முடன் வாழும் பரிசுத்த ஆவியை எங்களின் இதயத்தில் சுமப்போம். துன்புறும் எம் மக்களுக்கு நம்பிக்கையூட்டி புத்துயிர் அளிக்க வல்லவர் அவர்தான் என்ற அசையாத நம்பிக்கையோடு அவர் எங்களை ஆட்கொள்ள எங்களை முற்றுமுழுதாக அவருக்கு கையளிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரைப்பட திறனாய்வு

## 'Slumdog Millionaire'

**(சேரிவாசி கோடீஸ்வரனாதல்)**

உலகத்திரைப்பட வரலாற்றில் பல ஒஸ்கார் விருதுகளை ஒருசேர வென்ற திரைப் படங்களின் வரிசையில் இந்திய-இங்கிலாந்து கூட்டுத்தயாரிப்பில் உருவாகி, டனி போயல (Danny Boyle) இயக்கிய Slumdog Millionaire என்ற திரைப்படமும் இணைந்துள்ளது. மொத்தம் ஏழு ஒஸ்கார் விருதுகளைத் தனதாக்கிக் கொண்டுள்ளது.

படிப்பறிவற்ற, அநாதையான, மும்பையின் சேரிப் பகுதியைச் சேர்ந்த பதினெட்டு வயதான ஜமால் மலிக் என்பவரைக் கதாநாயகன் அவன் தொலைக்காட்சியில் நடாத்தப்படும் கோடீஸ்வரன் அதிர்ஷ்டப் பரிசுப்போட்டி ஒன்றில் இருபது மில்லியன் ரூபாய்களை வெல்வதற்கு இன்னும் ஒரு கேள்விக்கான சரியான பதில்தான் கூற வேண்டும். அவ்வேளை நிகழ்ச்சிகள் நிறைவு பெற்று அடுத்த நாள் தொடருவதற்காக காத்திருக்கின்ற வேளையில் காவல்துறையால் கைது செய்யப்படுகின்றான். 'எப்படி ஒரு படிப்பறிவற்ற சேரிப் பையன் இவ்வளவு வினாக்களுக்கும் சரியான விடைகளைக் கூறமுடியும்?' என்பதே காவல்துறையின் சந்தேகமாகும். எனவே ஜமால் மலிக் ஏதேனும் திருகுதாளம் செய்திருக்கலாம் என்ற பலத்த சித்திரவதைகளுக்கு மத்தியில் விசாரணை செய்கிறார்கள். ஆனால் ஜமால், அவன் அண்ணன் சலீம், அதே சேரியைச் சேர்ந்த இன்னோர் அநாதையான லத்திகா ஆகிய மூவரும் மும்பைச் சேரிகளில் நடத்திய அவல வாழ்வும், பெற்ற துன்பியல் அனுபவங்களும், அவைகளினூடான பட்டறிவுமே ஜமால் சரியான பதில்களைக் கூறுவதற்கு வழி என்ற நிரூபணமானதும் விடுதலை செய்கிறார்கள். அடுத்த நாள் போட்டியில் கலந்து கொள்வதன் மூலமாக ஜமால் இருபது மில்லியன் ரூபாய்களை மட்டுமல்ல, பால்ய காலந்தொட்டு அவனது கனவாக இருந்து வந்த காதலியான லத்திகாவையும் அடைந்து கொள்கிறான்.

கோடீஸ்வரன் அதிர்ஷ்டப் பரிசுப்போட்டியின் போது கேட்கப்படுகின்ற கேள்விகளும், அவற்றிற்கான விடைகளைக் காட்சிப்படுத்தப் படுகின்ற ஜமால், சலீம், லத்திகா ஆகியோரின், சேரிவாழ்வின் துன்பியல் அனுபவங்களும், சரியான விடைகளை எப்படிக் கொடுத்தான் என்று அறிய காவல்துறையால் கொடுக்கப் படுகின்ற சித்திரவதைகளும் கதையின் களங்களாகும். அதிர்ஷ்டப் பரிசுப்போட்டியின் மண்டபம், சேரிப்பகுதிகள், காவல் நிலையச் சித்திரவதைக்கூடம் ஆகிய மூன்று பிரதான இடங்களுக்குள் காட்சிகள் சுழல்கின்றன.

வாழ்க்கையின் நிகழ்வுகளினூடாகப் பெறும் அனுபவங்களாலும், தமது இருத்தலுக்கான போராட்டங்களாலும் மனிதர் படிப்பறிவு கற்றுக் கொள்கிறார்கள். மும்பை நகரின் சேரிப் புறங்களையும், சேரிவாசிகளின் வாழ்வுப் போராட்டங்களையும் பின்னணியாகக் கொண்டது இத்திரைக்கதை. சேரிப்புற மக்களின் வாழ்வுக்கான தேடல், வறுமையின் மத்தியிலும் சினிமா நட்சத்திரங்கள் மீதான வெறி, மதவெறி போன்ற சாதாரண இந்திய வாழ்வின் யதார்த்தப் பரிமாணங்களைப் பின்னணிப்பிணைந்ததாக கதை வளர்கிறது. உதாரணத்திற்கு ஒரு சிறிய காட்சி 'இராமரின் கையில் உள்ள பொருட்கள் எவை?' என்ற பரிசுப்போட்டியின் ஒரு கேள்விக்கான விடையை முன்னமே மதத்தகமான கதாநாயகன் ஜமால் அறிந்து கொண்ட விதம் இந்திய வாழ்வின் ஒரு அவலம் நிறைந்த யதார்த்தமாகும். சேரியில் நடந்த இந்து-முஸ்லிம் கலவரத்தில் தனது தாய்கொலைபட்டதைப் பார்த்துக்கொண்டே தனது உயிரைக்காக்க ஓடிக்கொண்டிருக்கும் சிறுவனான ஜமால் மலிக் எதிரேயிருந்த இராமர் சிலையில் மூடிய மோது கையில், அவர்கையில் கண்ட வில்லையும், அம்பையும் எப்படி மறப்பான்? இவ்வாறான வாழ்வியல் யதார்த்தங்களின் கலைத்தொகுப்பாக இத்திரைப்படம் வழங்கப்பட்டுள்ளது.

மும்பைச் சேரியிலிருந்து வரும் ஏழைச் சிறுவன் ஒருவன் குறித்த பிரபலத்தைக் கதையின் களமாகக் கொண்டிருந்தாலும் இதன் அடிப்படையில் ஒரு காதல் கதையும் இணைந்துள்ளது. சிறுவயதுமுதலே அநாதைகளாக, ஒன்றாக பிச்சையெடுத்து, ஒன்றாக வாழ்க்கையில் எதிர்நீச்சல் போட்டு வளர்ந்த ஜமாலுக்கும் லத்திகாவிற்கும் இடையிலான காதல். அண்ணன் சலீம் மற்றும் மும்பைப் பண முதலைகளின் சுயநலத்தினால் சீர் குலைக்கப்பட்டாலும், மீண்டும் அவர்களது காதல், எவ்வித சாகசங்களோ அல்லது அற்புதங்களோ நடக்காது யதார்த்தம் நிறைந்த சம்பவங்களினூடாகக் கைகூடிவருவதாகக் கதை அமைக்கப்பட்டுள்ளது. கதையின் முக்கிய களமான கோடீஸ்வரன் அதிர்ஷ்டப் பரிசுப் போட்டியில் கலந்து கொள்ளச் சென்றதே தனது அன்புக்குரியவள் அந்நிகழ்ச்சியை விரும்பிப் பார்ப்பவள் என்று தெரிந்து கொண்டதினாலே தான் என்று ஜமால் விசாரணையின் போது ஒப்புக்கொள்கிறான்.

சிறந்த பாடல் மற்றும் இசையமைப்புக்கான இரண்டு ஒஸ்கார் விருதுகளை தமிழகத்தின் 'இசைப்புயல்' ஏ.ஆர்.ரஹ்மான் பெற்றமை இந்திய திரைப்பட வரலாற்றில் சாதனையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மொத்தத்தில் ஆபாசக்காட்சிகள், தனிநபர் சாகசங்கள், விரசம் நிறைந்த வார்த்தைப் பிரயோகங்கள் அற்ற அதே வேளையில் பல நுட்பங்கள், இந்திய வாழ்வின் யதார்த்தங்கள் நிறைந்த ஒரு திரைப்படத்தை ஆங்கில மொழி மூலத்தில் பார்க்கக் கூடியதாக இருக்கிறது.

**சமூகத் தொடர்பு ஆணையம், யாழ் மறைமாவட்டம்**

## நற்செய்திப் பணி நம் அனைவரின் பணி

இறை அரசின் மதிப்பீடுகள் அன்பு, அமைதி, சமத்துவம், மனித நேயம் கலந்த மாண்பு ஆகியன. இவை மனங்களை ஒருமனப்படுத்தி புதிய சமுதாயம் படைக்கும் ஆற்றல் கொண்டவை. நாம் வாழும் சமூகத்திலும் நாளுக்கு நாள் வளர்கின்ற திருச்சபையிலும் இறை அரசின் மதிப்பீடுகளாக வாழ்ந்து கிறிஸ்துவின் நற்செய்தியைப் பறைசாற்றிக் கொண்டு சென்றவர் களின் வாழ்வு போல் நாம் அனைவரும் நற்செய்திப் பணி செய்ய நற்செய்தியாக மாற தூண்டுதலான வர்களாக வாழ வேண்டும். நம் வாழ்வும் செயலும் நற்செய்தியாக மாறும்போது கிறிஸ்துவின் அன்பையும் அமைதியையும் நாம் வாழும் இடங்களில் பிறருக்குப் பகிர்ந்தளிப்பவர்களாக இருக்கிறோம்.

யேசுக்கிறிஸ்துவின் போதனைகளைக் கேட்டு அவர் செய்த பல புதுமைகளைக் கண்ட திருத்தூதர் நற்செய்தியைப்பரப்ப உலகில் பல நாடுகளுக்கும் சென்றனர். அதேபோல் திருமுழுக்குப் பெற்ற நாம் அனைவரும் நற்செய்திப்பணியின் ஊழியராக மாற இன்று அழைக்கப்பட்டிருக்கிறோம். இன்று அறிவியல் பொருளாதாரம் கல்வித்துறைகளில் முன்னேற்றம் காணக்கூடியதாக இருக்கின்றது. இருப்பினும் எமது ஆன்மீகம் வீழ்ச்சியடைகின்றது. அன்புக்காக ஏங்குவோர் எத்தனை பேர் நம் இதயங்களில் நமது குடும்பங்களில் நம் சமுதாயத்தில் நாம் வாழும் உலகில் இருக்கிறார்கள். உண்மையான அமைதி நிலவ வேண்டுமென்றால் நாம் இயேசு ஒருவரிடம் தான் திரும்பவேண்டும். இறைமைந்தன் இயேசுவின் ஆசீர் பெற்ற மக்களாக வாழ்ந்து நற்பணி புரிய எங்களை இறைவனிடம் சமர்ப்பிப்போம்.

**செபம்**

பேரிரக்கமுள்ள இறைவா நீர் எமக்குத்தந்த தாலந்துக்காக நாம் உம்மைப் போற்றிப் புகழ்கின்றோம் நன்றி கூறுகிறோம் உமது அளவற்ற அன்புதான் எமக்கு இக்கொடைகளை வழங்கக் காரணம் என்பதை நாம் அறிவோம் நீர் தந்த தாலந்தைப் பெருக்கி உமக்கு அர்ப்பணிக்க அருள் புரிவீராக. சோம்பேறிகளாக நாம் இராமல் உமக்குப் பணி புரியும் ஊழியர்களாக எங்களை மாற்றியருளும். நாம் தளர்ந்து போகாமல் முயற்சி செய்து முன்னேற தேவையான ஆற்றலை எமக்கு அருள வேண்டுமென்று உம்மைக் கெஞ்சி மன்றாடுகின்றோம் ஆமென்.

சே. ஜேசி பத்திமா
புனித யாகப்பர் ஆலயம், குருநகர்.

## திருக்குடும்ப சபையில்...

(2ம் பக்கத் தொடர்ச்சி.)

விசுவாசத்தை உறுதிப்படுத்தும் பணியைப் புரிவதற்கு ஆறு கிளைகள் கொண்டதான திருக்குடும்ப சபையை நிறுவினார். தன் சபையின் உன்னத கட்டமாக செபத்திலும் தியானத்திலும் தம் வாழ்வை அர்ப்பணிக்கும் ஓர் கிளையை நிறுவ ஆசித்தார். இந்த ஆவலின் விளைவுதான் ஆவணித் திங்கள் முதலாம் திகதி 1856ல் நிறுவப்பட்ட தியான யோகக் கிளையாகும். இது அவரது மரணத்தின் இரு வருடங்களின் முன் நிறுவப்பட்டது. தியான யோக சபையினர், சபையின் மறைபொருளாக, அதன் உயிர் நாடியாக இருக்க வேண்டுமென விரும்பினார். மேலும் 1822ல் அருளப்பட்ட நற்கருணை ஆசீருக்கு இவர்கள் இடையறா நன்றி செலுத்தும் பணியையும் கொடுத்தார். நற்றையை நோக்கிய வண்ணமாக இருக்கும் இயேசுவின் மனப்போக்கை தியான யோக சபைச் சகோதரிகள், அமைதியிலும் ஏகாந்தத்திலும் நிறைவேற்றுகிறார்கள். உலகின் மத்தியில் இறைவனுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில் இவர்கள் எடுத்துக்காட்டாக விளங்குகிறார்கள். அப்போஸ்தலிக்க பணிகளில் ஈடுபட்டுள்ள சகோதரிகள் மேலும் தங்களின் செபத்திற்காக ஒப்படைக்கப்பட்ட பணிகள் மேலும், தேவைப்படும் அருளையும், ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொடுக்கிறார்கள்.

அமைதியிலும் ஏகாந்தத்திலும், தேவன் மாத்திரமே என்ற மனப்போக்கில், தொடர்ச்சியான செபம், மகிழ்ச்சியான தபம் என்றும் திருச்சபையின் நோக்கை. தியான யோகச் சகோதரிகள் வாழ்கின்றனர். குழுவாழ்வு தியான சபையின் வாழ்வுக்கு முதன்மையானது எம் குழுக்களில் நாம் வாழ்கின்ற ஐக்கிய வாழ்வு, எம்மிடமிருந்து சபைச் சகோதரிகளுக்கும், உலகம் முழுவதற்குமே அலைகளைப் பரவச் செய்கிறது. இன்று உலகில் அன்பற்ற நிலை, பிரிவுகள் மலிந்து காணப்படும் நிலையில், எமது அன்பு வாழ்வு, அன்பான வார்த்தைகள், செயல்கள், ஐக்கியம் என்பன எம் குழுக்களை மட்டுமல்லாது, முழு உலகையும் கட்டியெழுப்புமென்று நம்புகிறோம்.

எமது மறைந்த நாளாந்த வாழ்வில் இயேசுவோடு ஒன்றித்து நாம் ஒப்புக் கொடுக்கும் ஆராதனை, புகழ்ச்சி, நன்றி, சகோதரருக்காக நாம் எழுப்பும் வேண்டுதல்களும் இயேசுவில் நாம் எல்லோரும் ஓர் குடும்பமாக இருக்க ஆசிக்கும் எம் வாழ்வின் பிரமாணிக்கத்தைத் தூண்டுகின்றது. திருக்குடும்ப சபை ஆரம்பமான கால கட்டத்தில், வறுமை, எதிர்ப்புக்கள், கேள்விக்குறிகள், ஏளனம் என்பவற்றை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இந்த இக்கட்டான நிலைகள் மத்தியில் ஓர் அருங் கொடை அருளப்பட்டது. 1822 மாசித்திங்கள் மூன்றாம் நாள் நற்கருணை ஆசீர்வாதத்தின் போது, குருவானவர், பரிசாரகர் அருட்சகோதரிகள், பொது நிலையினர், பிள்ளைகள் கூடியிருக்க, நற்கருணை நாதர், அவர்கள் எல்லோருக்கும் தம்மைக் காண்பிக்க அருள் கூர்ந்தார். அவரது நிறைந்த பிரசன்னத்தை ஆசீர்வதித்து நிலைவு கூர்ந்து நன்றி செலுத்தும் பணி, தியான யோக சபையினரிடமே ஒப்படைக்கப்பட்டது. இதன் நிமித்தமே எமது குழுக்களில் நற்கருணை ஆராதனை நடைபெறுகின்றது. நற்கருணையே எம்மை திருக்குடும்பத்துடன் இணைக்கும் சாதனம். அற்புதமான விதமாய், ஆசீர் அளித்த ஆண்டவர், தொடர்ந்தும் எம்மை ஆசீர்வதித்துக் கொண்டே இருக்கின்றார் என்ற உறுதியான நம்பிக்கையை அவரது ஆசீரையும், அருளையும் எல்லா மக்களுக்கும் அளிக்க அவரை வேண்டுகின்றோம்.

ஸ்தாபகர் அளித்த முக்கியமான ஒழுங்கு ஒன்று இந்த வகையில் எம்வாழ்வை வர்ணிக்கின்றது. "இயேசு மரி, சூசை, நசரேத்தில், மந்தைகளில் செபத்திலும் தியானத்திலும் தம் வாழ்வைச் செலவழித்து மறைந்த வாழ்வு வாழ்ந்தார்களோ, அவர்களைப் பின்பற்றி, இவர்களும் அன்பு வாழ்வு, அமைச்சல், சுயமறுப்பு என்னும் புண்ணியங்கள் அமைந்த தியான வாழ்வு, பிறரின் இரட்சணியத்தில் வாஞ்சை கொண்ட வாழ்வை வாழ்வார்களாக." தியான யோகச் சபைக் குழுக்களாக, நாம் வசிக்கும் பங்குத் தள திருச்சபையின் ஓர் பகுதியாக எம்மை அமைத்துக் கொள்கிறோம். செபமே எமது பணி. கிறிஸ்துவின் பிதாவை நோக்கிய, ஆராதனை புகழ்ச்சி, நன்றி, வேண்டுதல்களைச் செய்கின்ற மனப்போக்கில் எம்மை இணைத்துக் கொள்கிறோம்.

தியானக் குழுவின், முதற்குழு ஸ்தாபித்த 150ம் வருடத்தைக் கொண்டாடும் நாம், பிரான்ஸ், ஸ்பெயின், ஆங்கில மொழி பிரதேசங்களில் வாழும் எம் சக சகோதரிகளுடன், இலங்கையில் வாழும் நாமும் ஒன்றித்து, நன்றிப் பெருக்கோடு எம் இதயங்களை ஆண்டவர்பால் திருப்புவோம். திருச்சபையிலும் உலகத்திலும் மேலும் இந்த அழைத்தலை அருளிய தேவனை ஏற்றிப் போற்றுவோம்.

எம் வாழ்வை, பிரமாணிக்கத்துடனும் மகிழ்வுடனும் வாழ, எம்மைப் பல வழிகளிலும், ஊக்குவிக்க அனைவருக்கும் எம் நன்றிகள் உரித்தாகுக!


## பரிசுத்த ஆவிக்கு செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத இலக்கை நான் அடைய வழி காட்டும் பரிசுத்த ஆவியே, உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என் உள்ளத்தை புனிதப்படுத்தி எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே என் வாழ்வின் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச் சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காலத்திலும் உம்மில் இருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேன் என உறுதி கூறுகின்றேன். நானும் புனிதர்களுடன் சேர்ந்து உமது மகிமையில் நிலைத்திருக்க வேண்டுகின்றேன். ஆமென்.

"ஓ பரிசுத்த ஆவியே உமக்கு நன்றி"!

Advt-40/09 ஓர் அடியான்

## 5ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 27-05-1935 இறப்பு 30-05-2004

S.A.E. இரட்ணராஜா

குடும்பத்தில் சுடர் ஒளியாய்
சேவையில் ஓர் ஆசானாய்
வாரிசில் கல்விச்சுடராய் வாழ்ந்து
இறைபதமடைந்து தூயவரானீர்
இறைஞ்சுகின்றோம் உமக்காக!

இவரது அன்பில் நிலைத்திருக்கும்
மனைவி, திருமதி இ. இரட்ணராஜா,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள். Advt-39/09

கரம்பொன்.

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
சவரிமுத்து டேவிற்

பிறப்பு: 20.03.1932
இறப்பு: 31.05.2008

அன்பின் இறைவா!
ஆறுதல் அனைத்திற்கும் ஊற்றும்,
நம்பிக்கையும் நிறைவும்
விசுவாசத்தை அளிப்பவரும்,
இறந்தவர்களை உயிர்பெற செய்பவரும் நீரே!
"இறப்பினால் வாழ்வு மனிதருக்கு
மாறுபடுகின்றதே அன்றி
அழிக்கப்படுவதில்லை"
எம் சகோதரன் அமரர் சவரிமுத்து டேவிற்
என்றும் அடியாரின் பாவம் போக்கி
என்றென்றும் உம்மோடு புகழ்பாட
செய்வீராக.

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்
பேரப்பிள்ளைகள்

17/1, மக்கிகுலத்தீவு, யாழ்ப்பாணம்.

Advt-42/09

## நீங்காத நினைவில் 3ம் வருட நிறைவு



அமரர்
கணபதிப்பிள்ளை மார்க்கண்டு ஜோசப்

மண்ணில்: 25.01.1925 விண்ணில்: 19.05.2006

"ஆண்டவரே உமது நீதிக்கேற்ப
என்னை விடுவித்தருளும்,
எனக்கு நீர் செவிசாய்த்து
என்னை மீட்டுக்கொள்ளும்"

இனிய உங்கள் முகம் என்றும்
எம் இதயத்தில் நிறைந்து நிற்கும்.

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்
மருமக்கள் பேரப்பிள்ளைகள்

இல. 28A நாவலர் வீதி
கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.

Advt-41/09


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாந்துறைப் படிப்பகம்

# நின்மதியாய் இளைப்பாற...

"சரத் ஜீவன்" என்ற ஒரு
குருமணியின் மரணத்தால்
வேதனைக்குட்பட்டு
யாழ் மறை இங்கு அழுகின்றது
ஆயருடன் சக குருக்கள்
மௌனித்து இங்கு நிற்க
பெற்றதாயும் சோதரரும்
விழிநீர் சொரிந்து
வெதும்பி அழுகின்றனர்
ஈர் மூன்று ஆண்டுகள்
குருத்துவத்தில் பெருமை கொண்டாய்
துன்புறும் ஊழியனாய்
கிறிஸ்துவைப்போல் பணிபுரிந்தாய்
நால்பத்து ஆண்டோடு
ஓர் ஆண்டு அகவையிலே
உன்பணியில் நிறைவு கண்டு
இறைவன் உன்னை அழைத்திட்டார்

போரின் கொடுமையால்
துயருற்ற மக்களுக்கு
உதவும் கரங்களாக
வன்னி மண்ணில்
நீ இருந்தாய்
போர் முடிந்து விட்டதென்ற
செய்தியினை நாம் கேட்டோம்
பத்திரமாய் வருவாய் என
விழியோரம் பாத்திருந்தோம்

"பாதர் சறா இறந்துவிட்டார்"
இடியோசைச் செய்தியொன்று
இதயத்தைத் தாக்கியது
பேராலய மணியோசை
முகாரி பாடி நின்று
உன்மறைவைச் சொல்லியது
பீடப்பணியாளனாய்
திருப்பீடத்தில் உனைக்கண்டோம்
ஆலயத்தில் இசைமீட்டி
இறைவனை நீ புகழ்ந்து நின்றாய்
இறைவனின் குருவாகி
பேராலய பங்கினிற்கு
பெருமை சேர்த்து
அணி செய்தாய்



பட்ட துன்பம் போதுமென்று
தன்னோடு வாழ்வதற்கு
இறைவன் உன்னை அழைத்திட்டார்
நன்றியோடு உனை நினைப்போம்
நாளெல்லாம் நாம் செபிப்போம்
மூவொரு கடவுள் முன்
உன் ஆன்மா மகிழ்ந்திருக்க
புனிதர்களின் நல்லுறவில்
நின்மதியாய் இளைப்பாற
இறையவனை வேண்டுகின்றோம்

**இ. அ. அமலரட்ணம்**
**புனித மரியாள் பேராலயம்.**

## சரத்ஜீவன் அடிகளே நீங்கள் எங்கே?

கஞ்சிக் கொட்டில் தான் தஞ்சமென்று
கனிந்த குரலில் உருகி நின்றீரே
கனிவு கொடுக்கத்தான் கடவுளும் இல்லையோ?
கதறியே நின்று கலங்குகின்றோமே

முள்ளிய வாய்க்காலில் முடங்கியே இருந்து
மூன்று வேளையும் உணவும் இன்றி
மூச்சுத் திணறப் பதுங்கு குழியில்
முடிவு வருமென காத்து நின்றீரே

உன்னத பணியாம் கிறிஸ்துவின் பணியை
உரித்துரபர மக்களுக்காய் அவர்கள்
உயர்ந்த வாழ்வு வாழவென்று
உளம் நிறைவாய் சென்றிருந்தீரே

அரிய சேவையும் அயாராப் பணியும்
ஆவலோடு ஆற்றியே நின்றீரே
அலைந்து திரிந்த மக்களையெல்லாம்
அனாதை என்று வாழ விடாது ஆதரவு கொடுத்திருந்தீரே

மனித மாண்புடன் மக்களோடு மக்களாய்
மாய்ந்து தானே சேவை செய்தீர்
மாரடைப்பு வந்து தானே
மாய்த்துக் கொண்டீரே உம் உயிரை

குருகுலமே இன்று உருகியே நிற்க
குடும்ப உறவினரும் கதறியே கலங்க
குறுகிய கால குருத்துவ பணியினில்
குறையின்றி நிறைவான பலியாய் நிற்கின்றீர்

**திருமதி. செல்வராணி ஞானரட்ணம், சுன்னாகம்.**

## இயேசுவின் பணியின் நேசர்கள்

தவமும் செபமும் தங்கிய வாழ்வு
அவலமும் அழுகையும் நீங்கிய நிறைவு
கவலையும் கலக்கமும் அகற்றும் பணியில்
நவமாய் நின்று நலம்பல காத்தீர்

யேசுவின் பணியில் ஜெகமது மலர
பேசுவதற்குரிய தியாகங்கள் புரிந்தீர்
மாசுமறுவற்ற உங்கள் பணியில்
வீசுகுண்டுகள் வீழ்ந்ததோ உம் உடல்

போருக்குள் அகப்பட்ட இறையாம் மக்களை
பாருக்குள் காக்கவே நீங்கள் முயன்றீர்கள்
வேருக்குள் நீரோடு பசுமையான இறைவா
ஊருக்குள் உத்தமான இவர்களைக் காப்பீர்

வசந்த சீலமாய் வழங்கிய பணிகள்
வாழும் மக்களின் இதயத்தின் மணிகள்
உத்தமமான மக்கள் பணி வழியில்
உயர்ந்த ஒப்பில்லா இதய தீபங்கள்

பக்தியின் நாதம் பரமனை எட்டும்
பூத்திடும் வசந்த சீலமாய் நாட்டும்
எத்தனை துன்பங்கள் நீக்கிய தந்தையரை
எறிகணை எச்சம் உங்களை தடுக்குமா

கவியும் போரினில் கலங்கா நெஞ்சம்
கலங்கும் உள்ளங்களின் உயர்வான தஞ்சம்
தவித்த மனங்களில் ஒளியான இவர்கள்
தீர்க்கமாய் நலம் பெற அருள்வீர் இறைவா

**பாலம் சேவியர், அல்லைப்பிட்டி.**

## குணமடைந்து வருகிறார்கள்



அண்மையில் வலைஞர் மடத்தில் யுத்தத்தின் போது படுகாயமடைந்த அருட்தந்தையர்கள் வசந்தசீலன், ஜேம்ஸ் பத்திநாதர் ஆகியோர் குணமடைந்து வருகிறார்கள். இவர்களில் மிக மோசமாக பாதிக்கப்பட்ட அருட்தந்தை வசந்தசீலன் அடிகளார் ஒரு கால் அகற்றப்பட்ட நிலையில் கொழும்பில் சிகிச்சை பெற்ற பின்னர் தற்போது கொழும்பிலுள்ள குருக்கள் தங்கும் இல்லத்திற்கு அழைத்து வரப்பட்டுள்ளார். அவரும் இக்கொடிய யுத்தத்தினால் படுகாயமுற்று அங்கங்களை இழந்து பல்வேறு இடங்களில் துன்புறும் மக்கள் அனைவரும் முழுமையாக குணமடையவும் ஆறுதல் பெறவும் வேண்டுமென தொடர்ந்து இறைவனைப் பிரார்த்திப்போம்.

## ஆனைக்கோட்டைப் பங்கில் அன்பிய எழுச்சி வாரம்

ஆனைக்கோட்டைப் பங்கைச் சேர்ந்த ஆனைக்கோட்டை புனித அடைக்கல அன்னை ஆலயம், நாவலி புனித பேதுரு பாவிலு ஆலயம், தேவர் கட்டு திரு இருதய ஆண்டவர் ஆலயம் ஆகியவற்றைச் சார்ந்த இறைமக்களுக்கான அன்பிய எழுச்சி வாரம் கடந்த வாரம் சிறப்பாக அனுசரிக்கப்பட்டது.

பங்குத்தந்தை அருட்பணி. மவுலிஸ அடிகளாரினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்நிகழ்வை யாழ் மறைமாவட்ட அன்பிய ஆணைக்குழுவினர் முன்னின்று நடாத்தினார்கள். அருட்பணி. ரவிச்சந்திரன், அருட்பணி. இயேசுரட்ணம் ஆகியோரின் வழி நடாத்தலில் ஏனைய பங்குகளைச் சேர்ந்த அன்பிய ஊக்குவிப்பாளர்களினால் இல்லத்தரிசிப்புகள், கருத்தமர்வுகள், கண்காட்சிகள் போன்றவை முன்னெடுக்கப்பட்டு பங்கு மக்கள் மத்தியில் அன்பிய வாழ்வின் அவசியம் வலியுறுத்தப்பட்டது.

இவர்களின் உதவியோடு வெவ்வேறு வலயங்களைச் சேர்ந்த மக்கள் கூடி அன்பிய வழிபாடுகளையும் செயற்பாடுகளையும் நடாத்தி அன்பிய வாழ்வின் முன்சுவையைப் பெற்றுக் கொண்டார்கள். யாழ் மறைமாவட்ட புதுப்பித்தல் நிகழ்வின் முக்கிய நிகழ்ச்சித் திட்டமாகிய 'எல்லாப் பங்குகளிலும் அன்பியங்களை உருவாக்குதல்' என்ற திட்டத்திற்கமைய முன்னெடுக்கப்பட்ட இந்நிகழ்வு இறைமக்கள் கிறிஸ்துவின் சாட்சிகளாக வாழ வழிசமைத்துக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

## குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் இறை இரக்க பெருவிழா

இறை இரக்க பெருவிழா 19.04.2009 தினத்தில் இறை உணர்வுடன் அமைதியாக கொண்டாடப்பட்டது. இறை இரக்க பக்தர்கள் தீபங்களை ஏந்திய வண்ணம் பவனியாக ஆலயத்துக்குள் நுழைந்து யேசுவின் உயிர்ப்பின் அடையாளமாகிய பாஸ்கா திரியை சூழதீபங்களை சாற்றினர். சாற்றியவுடன் அருட்தந்தை நேசராஜா அவர்களினால் திருப்பலி கொண்டாட்டம் ஆரம்பிக்கப்பட்டது. மறை உரையில் இறை இரக்கத்தின் மகிமை பற்றியும், நாம் எமது வாழ்வில் இறை இரக்கத்தில் நம்பிக்கையை ஆழப்படுத்த வேண்டுமென்ற அவசியத்தையும், மிகச்சிறப்பாக கூறப்பட்டது. மேலும் ஆதிக்கிறிஸ்தவர்கள் யேசுவின் உயிர்ப்பில் நம்பிக்கை வைத்து தம் வாழ்வை பகிர்தலுக்கு அர்ப்பணிக்கவும், நாம் கொள்கை அளவில் இறைவனை விசுவசிக்காமல் எமது வாழ்வில் இறை இரக்கத்தில் நம்பிக்கையை ஆழப்படுத்த வேண்டுமென்ற அவசியத்தையும் மிகச் சிறப்பாக கூறப்பட்டது. திருப்பலியின் நிறைவில் இறை இரக்கத்திற்கு தம்மை அர்ப்பணிக்கின்ற செபத்தில் எல்லோரும் தம்மை அர்ப்பணித்திருந்தனர்.

வருடா வருடம் இறை இரக்க விழாவை சிறப்பிக்கும் முகமாக திரு. நிக்கிலஸ் (பப்பா) அவர்களின் தலைமையில் சாட்டி, பண்டத்தரிப்பு ஆகிய யாத்திரை ஸ்தலத்திற்கு இச்சபையினர் செல்வது வழக்கமாக இருந்தது. ஆனால் இம்முறை எமது மக்களின் துன்பகரமான வாழ்வை மனதில் சுமந்தவர்களாய் தமது பகிர்தலின் அடையாளமாக இறை இரக்க சபையினரின் அன்பளிப்பு துன்பப்படும் மக்களின் தேவைகளை நிறைவேற்ற வழங்கப்பட்டது.

**தகவல் :- யூலியஸ் யூஜின் (ஆசிரியை)**

## குடும்ப வாழ்வை மீட்டெடுத்தலும் அமைதியைப் பேணுதலும்

### – அகவொளியில் குடும்ப தின நிகழ்வு –




அகவொளி குடும்ப உளவள நிலையத்தில் 13.04.2009 திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதம விருந்தினராக வருகை தந்திருந்த மதிப்புக்குரிய ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் மங்கள விளக்கேற்றல் வைபவத்துடன் குடும்ப தின நிகழ்வு ஆரம்பமானது. தொடர்ந்து அகவொளி நிலைய இயக்குனர் அருட்பணி எஸ். ஜே. இராஜநாயகம் அடிகளாரும் மங்கள விளக்கேற்றி இந் நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார்கள்.

இந்நிகழ்வின் ஆரம்பமாக வரவேற்புரையினை திரு.அன்ரனிப் பிள்ளை அவர்கள் ஆற்றினார். இதனை தொடாந்து நிலைய இயக்குனர் நிலைய செயற்பாடுகளும் அதன் நோக்கங்களும் பற்றி எடுத்துக் கூறினார். இதன் பின்னர், யாழ் ஆயர் தனது உரையினை ஆற்றினார். இவர் அனைவரையும் வரவேற்று ஒரு குடும்பத்திற்கு அன்பு, விட்டுக்கொடுப்பு, புரிந்துணர்வு, ஏற்றுக்கொள்ளுதல், மதிப்பு போன்றன ஒருவரிடத்தில் இருக்க வேண்டும் என்ற கருப்பொருளில் உரையாற்றினார்.

தொடர்ந்து எமது நிலைய இயக்குனர் அருட்பணி எஸ். ஜே. இராஜநாயகம் அடிகளார் "குடும்ப வாழ்வினை மீட்டெடுத்தலும் அமைதியைப் பேணுதலும்" என்ற தலைப்பில் தனது உரையினை ஆற்றினார். இதில் அவர் குடும்ப உருவாக்கம், குடும்பத்தில் அடிப்படையான செயற்பாடுகள் பற்றி விளக்கினார்.

- ➢ அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்ட ஆட்சி ஆதிக்கக் கொள்கை உடைய குடும்பம்,
- ➢ அடையாளத்தை அடிப்படையாக வைத்து தன்னிலை சார்ந்த குடும்பம்.
- ➢ ஒற்றுமையினை அடிப்படையாகக் கொண்ட குடும்பம் போன்ற கருத்துக்களைப் பரிமாறினார்.

அதனை தொடர்ந்து "குடும்பம் ஒரு இறையியல் நோக்கு" என்ற நோக்கில் அருட்பணி கிருபாகரன் உரையாற்றினார். திருவிவிலியத்தை அடிப்படையாகக் கொண்ட குடும்ப உருவாக்கங்கள் பற்றியும் குடும்பத்தை தெய்வீகத்துடன் ஒப்பிட்டும் தனது கருத்தினை ஆற்றினார்.

அதனை தொடர்ந்து குடும்ப வாழ்வில் வறுமையும் அதன் தாக்கங்களும் என்ற கருப்பொருளில் கியூடெக் இயக்குனர் ஜெயக்குமார் அடிகள் உரையாற்றினார். வறுமையினால் ஒரு குடும்ப சமூகம் எவ்வாறு பாதிப்படைகின்றது என்றும் இதனால் ஒரு மனிதன் உடல், உள ரீதியாக எவ்வாறு பாதிப்படைகின்றான் என்றும் விளக்கினார்.

மேலும் அருட்பணி றோகான் அவர்கள் தொழில் நுட்ப உயிர், "தொழில்நுட்ப சூழமைவில் குடும்பம்" என்ற கருப்பொருளில் உரையாற்றினார். இதில் உயிர் தொழில் நுட்ப வளர்ச்சி, தொழில் நுட்ப வளர்ச்சியில் குடும்பம், உயிர் தொழில்நுட்ப வளர்ச்சியும் குடும்பமும் என்ற விடயங்களில் தனது கருத்துக்களை பரிமாறினார்.

"குடும்பமும் தொடர்பு சாதனங்களும்" என்ற தலைப்பில் திரு. K. றதிகரன் உரையாற்றினார். இதில் தொலைக்காட்சி, வானொலி நிகழ்வுகள் எப்படி குடும்பங்களில் ஆதிக்கம் செலுத்துகின்றன என்றும் அதில் உள்ள தீமைகள் பற்றியும் கூறினார். தொடர்பு சாதனங்களால் ஒருவருடைய எண்ணங்கள், சிந்தனைகள் மாறுகின்றன என்று ஊடகங்களை அவர்:

- ➢ அறிக்கை சார் ஊடகம்
- ➢ பிரதிபலிப்பு சார் ஊடகம்
- ➢ இலத்திரனியல் ஊடகம் என

வகைப்படுத்தி தனது கருத்துக்களை பரிமாறினார்.

இறுதி நிகழ்வாக "பால நிலைக்கு எதிரான வன்முறை" என்ற கருப்பொருளில் F.R. ரஜனி, G.B.V. இணைப்பாளர் அவர்கள் உரையாற்றினார். தனது கருத்து கூறினார். குடும்பங்களில் எவ்வாறான வன்முறைகள் இடம் பெறுகின்றன என்பது பற்றியும் குடும்ப சீரழிவு, மது போன்ற விடயங்களையும் ஆராய்ந்தார்.

தொடர்ந்து அன்ரனி பிரசன்னாவின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவு பெற்றது.

தூய ஆவியார் பெருவிழா

**திருவிழிப்பு ஆராதனை**

**30.05.2009 சனிக்கிழமை**
**இரவு 6.30 மணி முதல்**
**புனித மடுத்தீனார் குருமட மைதானத்தில்**

6.30 மணி - திருச்செபமாலை
7.00 மணி - குருமுதல்வர் தலைமையில்
தூய ஆவியார் திருவிழிப்புத் திருப்பலி
தொடர்ந்து திருவிழிப்பு ஆராதனைகள்
அதிகாலை 3.30 மணி யாழ் ஆயர் தலைமையில்
**தூய ஆவியார் பெருவிழா திருப்பலி**

- இறை தியானக் குழுவினர் -

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2009 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org